# HELLO MOBILE WORLD



122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050



அறைவு 03 இயம் 13 October 25-31 , 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 16 விலை : 30.00



**பணிநிலை வெற்றிடங்கள்**

**பல்நிற அச்சு எந்திர இயக்குனர் (மைண்டர்) - உதவியாளர்**

பலவர்ண கோர்ட் (4 Colour KORD) அச்சு எந்திர இயக்குனருக்கும் உதவியாளருக்கும் திருகோணமலையில் வேலைவாய்ப்புள்ளது. அனுபவமிருத்தல் சிறந்தது. நல்ல சம்பளத்துடன் விடுமுறை இருப்பிட வசதியும் உண்டு. மேலதிக நேரக்கொடை வழங்கப்படும்.

அழைக்க: 0777555738


# தொழிற்துறைத் துறைமுகமாகும் திருகோணமலை



உலகின் மிகப் பெரிய இயற்கைத் துறை - முகங்களில் ஒன்றான திருகோணமலைத் துறைமுகத்தை தொழிற்துறைத் துறைமுகமாக மாற்றவிருப்பதாக இலங்கை துறைமுக அதிகாரசபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வளத்தினை எதிர்காலத்தின் அதிகரித்துக்கொள்ளும் முகமாக புதிய தந்திரோபாயத்துடன் கூடிய செயற்றிட்டங்களை உள்ளடக்கி திருமலைத் துறைமுகத்தினை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்துறைக்கான துறைமுகமாக மாற்றுவோம் என துறைமுக அதிகாரசபைத் தவிசாளர் கலாநிதி பிரியத் பி. விக்ரம தெரிவித்துள்ளார்.

திருகோணமலைத் துறைமுகத்தில் செறிந்து கிடக்கும் உண்மையான 13

## 5 கிழக்கு உறுப்பினர் உட்பட 33 த.தே.கூ மாகாணசபை உறுப்பினருக்கு நீதிமன்ற அழைப்பாணை

நீதிமன்றில் ஆஜராகுமாறு 33 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை உறுப்பினர் - களுக்கு அழைப்பாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அழைப்பாணை உத்தரவினை பிறப்பித்துள்ளது.

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை பாரியளவில் படுகொலை செய்ததாகத் தெரிவித்து இந்த 33 மாகாணசபை உறுப்பின-ர்களும் ஐக்கிய நாடுகள் 13

# ஒரு மில்லியன் டொலர் மோசடி மூதூர்வாசி சூத்திரதாரி

ஒரு மில்லியன் டொலர் நோட்டினை ரூபாய் 15 மில்லியன்களுக்குப் பேரம் பேசி விற்க முனைந்த ஐவரைக் காவல்துறை கைது செய்துள்ளது.

ஏற்கனவே இம் மோசடியுடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப் பட்டிருந்த போதும் உடனடியாக முக்கிய சூத்திரதாரியைக் கண்டு பிடிக்க முடியாதிருந்தது.

எனினும் காவல் துறையின் இடைவிடாத 13









## பட்டப்படிப்பை வழங்கவுள்ள கல்வியியற் கல்லூரிகள்



கல்வியியற் கல்லூரிகள் எதிர்வரும் ஆண்டு முதல் பட்டங்களை வழங்கும் பல்கலைக்கழகத் தரத்திற்கு உயர்த்தப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் பந்தல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளில் மொத்தமாக கல்வி நடவடிக்கை மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மூன்றாண்டுகளுக்குத் 13



## 15000 தமிழர் வாக்களிக்க முடியாது

சனாதிபதி தேர்தல் நடை- பெறலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் திருகோணமலையில் 15,000 பேருக்கு தேசிய அடையாள அட்டைகள் கிடையாது என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) தெரிவித்துள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

திருகோணமலை மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர்கள், ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் மற்றும் மனித உரிமை கேந்திர நிலையத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினர் அண்மையில் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் கூடி ஆராய்ந்த போது 13



# ஆட்டிலறி படைத்தமையகம் அமைக்க காணி கையேற்பு

பாலத்தடிச் சேனையில் அமைந்துள்ள மூன்று ஏக்கா வயற்காணியினை இராணுவத் தேவைக்காகக் கையகப்படுத்தும் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாலத்தடிச்சேனையில் ஏற்கனவே அமைந்துள்ள ஆட்டிலறிப் படைமுகாமின் காணியினை நிரந்தரமாகக் கையகப்படுத்தி தலைமையகத்தை உருவாக்கவே காணி கையகப்படுத்தப்படவுள்ளது. 13


**AFTER ADVANCED LEVEL....**

Join Full time Courses

@

**VEAL BUSINESS COLLEGE**

No.159A, Sea View Road, Trincomalee - 026 222 76 22 / 0777 555 738

aat SRI LANKA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

# கிடைத்தால் செய்வோம் முயன்றால் பிழை!!!

கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடானது வலுவிழந்து செல்வதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

போரியல் தலைமைத்துவத்தின் அழிவின் பின்னர் தமிழர்களின் அரசியல் தலைமைத் துவத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பணிகள் என்பவை சாதாரண மனிதனால் கூட நிறைவேற்றப்படக்கூடிய பணிகளாகவே இருக்கின்றமையைப் பல்வேறு நிகழ்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

அந்நிலையில் கிழக்கின் அரசியல் தலைமைத்துவத்தைப் பலவீனப்படுத்தும் முகமாகப் பல்வேறு முயற்சிகளை தமிழர் தேசியத்திற்கு எதிரான சக்திகள் மேற் கொண்டுள்ள அதே வேளை தமிழரின் அரசியல் தலைமைகளும் "கிடைத்தால் செய்வோம்-முயன்றால் பிழை" என்ற கருதுகோளில் தமது மக்கள் பணியின் காலத்தைச் செலவிடுவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ள பொதுமக்களிடையேயான செல்வாக்குச் சரிவால் எதிர்காலத்தில் மிகப்பெரும் ஆபத்தொன்றை கிழக்கில் தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளவுள்ளது. ஒரு காலத்தில் எவ்விதமான உறுதியான தமிழ் அரசியல் தலைமைத்துவமும் கிழக்கில் இல்லாது போய்விடும் நிலையே அது.

அதற்குத் தனியே தமிழ் மக்களை மட்டும் குற்றஞ்சாட்டுவது சரியல்ல. தற்போதுள்ள அரசியல் தலைமைகளின் திட்டமிடற் பலவீனமும் அதற்கோர் காரணியாகும் என்பதை நாம் யாவரும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மூவருக்கும், ஏனைய பிரதேசசபை அங்கத்தவர்களுக்கும் இடையே திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பாகப் பொதுவான செல்நெறியொன்று உருவாக்கப் பட்டுள்ளதா? என்ற கேள்விக்கு பதில் என்ன?

பொதுவான குறிக்கோளும் அதற்கான செல்நெறியும் உருவாக்கப்பட்டால் மாத்திரமே மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து அங்கத்தவர்களும் தமது நடவடிக்கைகளை அதே செல்நெறியூடாகக் கொண்டு செல்ல முயல முடியும்.

தமிழ மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை கிராமம், பிரதேசம், மாவட்டம், மாகாணம் தாண்டி வெளிக் கொணர்வதற்கான எந்தவொரு அடிப்படைக் கட்டமைப்பையும் தற்போதுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கா-திருப்பது அதன் பலவீனமே!

இப்பலவீனமானது சாதாரண தமிழர்கள் தமது நியாயமான கோரிக்கையை முன்னெடுக்கும் போது அவர்களுக்குப் பின்புலமாக எவரும் இல்லை என்ற எண்ணத்தை அம் மக்களிடையே விதைத்து விடுகின்றது. அதனால் அவர்கள் மற்றொரு சக்தியினைப் பின்புலமாகக் கொள்ள நிர்பந்திக்கப்படுகின்றார்கள். அச்சக்தியின் ஒட்டு மொத்த நோக்கமே தமிழர் தேசியத்தினைச் சிதைப்பதாக இருப்பது மெல்ல மெல்லத் தெரியவரும் போது தமிழ் மக்கள் கையறுநிலையில் கிழக்கில் இருப்பார்கள் எனபதே உண்மை

எனவே தமிழ்த் தேசிக் கூட்டமைப்பு தம் அங்கத்தவரிடையே பொதுவான செல்நெறியைக் கிழக்கில் வகுக்குமா????

# சரணாகதி அரசியல் இல்லை சம்மாந்துறையில் ஹக்கீம்



"முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் பெற்றுக்கொள்ள வேண்டிய தருணத்தில் முஸ்லிம் காங்கிரஸ"க்கு சரணாகதி அரசியல் தேவையில்லை. எமது தீர்மானங்கள் மசூராவின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இதில் தலைமைத்துவம் மிகத் தெளிவாக இருக்கின்றது. அவசரப்பட வேண்டிய தேவை எமக்கில்லை" என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான முஸ்லிம் காங்கிரஸின் சாணக்கியமான இறுதித் தீர்மானங்கள் நிச்சயம் சமூகத்தின் நிலைப்பாடாகவே அமையும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை" எனவும் அவர் தெரிவித்தார்.

# சனாதிபதி நேர்மையானவர் அடிபணியாதவர்



### ஷான் இராசமாணிக்கம் புகழாரம்

மஹிந்த ராஜபக்ச நேர்மையானவர். எந்தவொரு சர்வதேச சக்திக்கும் அடிபணியாதவர் என்பதையும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் ஷான் ராசமாணிக்கம் சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு தொகுதி ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி அமைப்பாளர் ஷான் ராசமாணிக்கம் தினமின பத்திரிகைக்கான நேர்காணலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு தற்போது தமிழ் மக்களைப் பற்றிய கரிசனை கொஞ்சமும் கிடையாது. கூட்டமைப்பினர் தற்போது வடமாகாண மக்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அவர்களால் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்க முடியாது தற்போதைய அரசாங்கம் வடக்கு- கிழக்கு மற்றும் இலங்கையில் பரந்து வாழும் தமிழர்களுக்கு அநீதிகளை இழைக்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நடுநிலையான நபர். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து அபிவிருத்தியை முன்னெடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

# பாடசாலை மட்டத்தில் சட்ட உதவி வட்டம் ஆரம்பம்

சட்ட உதவி ஆணைக்குழு பாடசாலை மட்டத்தில் "சட்ட உதவி வட்டம்" என்ற அமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

மனித உரிமைகள். பெண்கள் மற்றும் சிறுவரின் உரிமைகள், பாலியல் மற்றும் பால்நிலை வன்முறைகள், நீதிமன்றங்களின் முறைமை, ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான அறிவினை வழங்கவும், தொடர்ந்து செயற்படவும் என உருவாக்கப்பட்வுள்ள இவ்வட்டத்திற்கான முதலாவது செயலமர்வு இன்று சர்வோதயத்தில் நிகழவுள்ளது.

இச்செயலமர்வில் திரியார் மகாவித்தியாலயம், சலி அம்பாள், மாதுமை, நாமகள் வித்தியாலயங்களும், இந்துக்கல்லூரி புனித மரியாள் கல்லூரி ஆகியனவும் கிண்ணியா குறிஞ்சாக்கேணி அறபா, அல்ஹிதாயா வித்தியாலயங்களும் கலந்துகொள்ளவுள்ளன. ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஐந்து மாணவர்களும் ஆசிரியர் ஒருவரும் இச்செயலமர்வில் உள்வாங்கப்படவுள்ளனர்.

# மூன்றாம் வகுப்புப் போட்டிகளில் மாவட்டத்தில் செல்வி.சு. சந்தியா முதலாம் இடம்



இந்துக் கலாசார அலுவல்கள் திணைக்களம் அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையே நடாத்திய பொது அறிவுப் போட்டியில் ஸ்ரீவினாயகர் ஆலய அறநெறிப் பாடசாலையைச் சேர்ந்த செல்வி. சுகுமார் சந்தியா மூன்றாம் வகுப்பில் திருகோணமலை மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

# நூராணியாவில் வாழ்வின் எழுச்சி

வாழ்வின் எழுச்சி - திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் 6ம் கட்டம் "நிறைவான இல்லம் வளமான தாயகம் என்ற தொனிப் பொருளில் சனாதிபதியின் தலைமையில் வாழையூற்று கிராமத்தில் உள்ள நூராணியா பாலர் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இருபத்தைந்து இலட்சம் மனைப் பொருளாதார அலகுகளை வலுப்படுத்தும் திட்டத்தின் கீழ் குச்சவெளிப் பிரதேசத்திலுள்ள வாழையூற்றுக் கிராமத்திற்கான செயற்றிட்டமே ஆரம்பிக்கப் படவுள்ளது என பாலர் பாடசாலை தலைவர் றவ்பீக் மலைமுரசிற்குத் தெரிவித்தார்

# வாசிப்பு மாதப் போட்டி

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு திருகோணமலை நகரசபை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கான கவிதை, ஓவியம், பொது அறிவு, குறுக்கெழுத்துப் போட்டிகள் திருகோணமலை பொது நூலகத்தில் நகரசபைதத் தலைவர் க. செல்வராஜா தலைமையில் 18.10.2014 சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது (அச்சுதன்)



# சமாதான நீதவான்



(அச்சுதன்)

மூதூர் - கட்டைபறிச்சானை பிறப்பிடமாக கொண்ட வர்ணகுல சிங்கம் விஜயானந்தம் திருகோணமலை மாவட்ட நீதி நிர்வாக வலயத்திற்கான சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் ஒரு வியாபார நிர்வாக மாணி பட்டதாரியும், தற்பொழுது மூதூர் கிழக்கு- சேனையூர் மத்திய கல்லூாயின் பிரதி அதிபராகவும் கடமை புரிவதுடன், கட்டைபறிச்சான் உதயம் சனசமூக நிலையத்தின் தலைவராகவும் செயற்படுவதுடன் - சிறந்த சமூக சேவையாளராகவும் காணப்படுகின்றார் என்பது குறிப்பிடதக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தவார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதான பார்வை

## the Sunday Observer

### சட்டத்தின் ஓட்டைகளை தேடும் விடுதலைப் புலிகள்



வெளிநாட்டில் சட்டத்தின் ஓட்டைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த விடுதலைப் புலிகள் முயற்சிக்கிறார்கள் என சர்வதேசப் பயங்கரவாத நிபுணரான றொகான் குணவர்த்தன தெரிவித்துள்ளார். ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கியுள்ள நிலையில் இக் கருத்தைத் தெரிவித்த றொகான் ஐரோப்பிய ஒன்றியம் இத்தீர்ப்பு தொடர்பாக சரியாக பின்னூட்டமளிக்காது விட்டால் ஏனைய தடைசெய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களும் இதே வழியைப் பின்பற்றும் எனத் தெரிவித்துள்ளார்.

2006ம் ஆண்டில் ஐரோப்பிய யூனியனால் விடுவிக்கப்பட்ட தடை உத்தரவானது ஐக்கிய ஒன்றியம பயங்கர வாதத்திற்கு எதிரான தெளிவான செய்தியொன்றை விடுத்திருந்தது. இத்தடையை அடுத்து பல தமிழர்கள் தமது மகிழ்ச்சியை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### உலகத்தின் முன் கிழிந்துள்ளது ஐரேப்பிய ஒன்றிய முகமூடி




பயங்கரவாதம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பொய்யான முகமூடி உலகத்தின் முன் கிழிந்து விட்டதாக ஜாதிக ஹெல உறுமயவின் முன்னணிச் செயற்பாட்டாளர்களுள் ஒருவரான உதயகம்மன்பில தெரிவித்துள்ளார். அத்துடன் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலுடனேயே இயங்கி வருகின்றது என்பதும் தெரியவந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்ட போதும் அதன் தனிநாட்டுக் கோரிக்கையோ அல்லது பயங்கரவாதமோ இன்னமும் தோற்கடிக்கப்படவில்லை. அதனை உலகம் முழுவதும் நன்றாக உணர்ந்துள்ளது. அப்படியிருக்கும் போது அல்குவேதா, ஐ.எஸ்.ஐ.எஸ் ஆகியவற்றுக்கு எதிராகப் போராடி வரும் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு மட்டும் உந்தூக்கத்தை வழங்கியுள்ளது எனச் சொல்லியுள்ளார்.

அவ் உந்தூக்கத்தினால் வடக்கில் மீண்டும் புலிகளை உருவாக்க ஐரோப்பிய ஒன்றியம் உதவலாம் என உதயகம்மன்பில சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

## the Leader

### உச்ச நீதிமன்றில் முறைப்பாடு – மாவை



தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும், வெளிநாட்டவர்களுக்கும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக உள்ள வடக்கு மாகாணத்திற்குச் செல்ல விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை நீக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றை சமர்ப்பிக்குமாறு தனக்கு சட்ட நிபுணர்கள் ஆலோசனை வழங்கி வருவதாக தமிழரசுக் கட்சியின் தலைவரும் த.தே.கூப்பின் முக்கிய அங்கத்தவருமான மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இது ஒரு அடிப்படை மீறும் செயல் என தெரிவித்தார். அத்துடன் ஒரு நாட்டிற்குள் நுழைய ஒரு விசாவே எடுக்க வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இலங்கைக்குள் நுழைய ஒரு விசாவும் பின் வடக்கு மாகாணத்திற்குச் செல்வதற்கு இன்னொரு விசாவும் எடுக்கவேண்டி நேரும் எனவும் தெரிவித்தார்.

### 3ம் தவணைக்கும் ஆதரவு தாருங்கள் – விமல்



எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் 3வது தடவையாகவும் போட்டியிடவுள்ள சனாதிபதிக்கு ஆதரவு வழங்குமாறு அமைச்சர் விமல் வீரவன்ச கோரியுள்ளார்.

அவரது கட்சி 3வது தடவையாகவும் போட்டியிடவுள்ள சனாதிபதிக்கு மட்டற்ற ஆதரவு வழங்கப் போவதாக தெரிவித்துள்ள அவர் தனது முன்னாள் கட்சியான ஜே.வி.பி 3வது தவணை தொடர்பாக எதிர்ப்பான கருத்துக்களை வெளியிட்டு வருவது முட்டாள்தனமானது எனத் தெரிவித்துள்ளார்.

### மாட்டிறைச்சிக்கு வைத்தியசாலைகளிலும் தடை



வைத்தியசாலையில் வழங்கப்படும் உணவு வகைகளில் மாட்டிறைச்சியை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

புரதம் மற்றும் சத்துக் கூடிய உணவான மாட்டிறைச்சியை தவிர்த்து அதற்குப் பதிலாக வேறு நிறை சத்துக்களைக் கொண்ட உணவுப் பொருட்களை வைத்திய சாலைகளில் நோயாளருக்கு வழங்கும்படியான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ஜனாதிபதி தேர்தல் குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை ஸ்ரீ.ல.மு.கா




ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி அவர்கள், இதுவரை தாம் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எந்தவொரு முடிவுக்கும் வரவில்லை என்றும் இந்த மாதம் இறுதியில் சந்திக்கும் போதே எடுக்கப்படும் இறுதி முடிவு தொடர்பாக விவாதிக்கவுள்ளதாக தெரிவித்தார்.

இம்மாதம் 30ந் திகதியில் ஸ்ரீ.ல.மு.கா இன் கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் ஜனாதிபதி மற்றும் பல அரசு உறுப்பினர்கள் அரசிலமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக முயன்று வரும் இவ்வேளையில் எமது கோரிக்கைகளும், எமது மனக்குறைகளும் நிறைவேற்றப்படக் கூடிய சந்தர்ப்பம் அமையுமாயின், எமது ஆதரவு ஜனாதிபதிக்கே என்றும் தெரிவித்துள்ளார்.

### மாதாந்தம் 10 மில்லியன் ஒய்வூதியகாரருக்கு :




இலங்கையிலுள்ள ஒய்வூதியம் பெறுபவர்கள் 543,552 பேருக்கும் ஓய்வுதியச் செலவாக மாதாந்தம் 10 மில்லியன்கள் செலவிடப்படுவதாக அரசு தெரிவித்துள்ளது. மாதாந்தம் 2000 பேர் ஓய்வு பெற்று அவர்களும் ஓய்வூதியம் பெறுவோர் பட்டியலில் இணைக்கப்படுவதாக தெரிவித்துள்ள பணிக்கொடையைப் பெறத் தகுதியான 15,000 பேருக்கு 8,000 மில்லியன் ரூபாய்கள் பணிக்கொடையாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தவிர்த்தல் – ஜே.வி.பி

ஜே.வி.பி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியும் என நினைத்தால், அவர்கள் சட்ட சிக்கல்களை உருவாக்க முனையாமல், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தங்கள் வலிமையை காட்ட வேண்டும் என நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்




ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என்று ஜே.வி.பி யின் வாதம் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தவிர்ப்பதற்காக செய்யும் ஒரு தந்திரம் ஆகும் என்றும் கூறினார்.

### எபோலா – பயப்படத்தேவையில்லை சுகாதார அமைச்சுப் பேச்சாளர்

சண்டேலீடருக்கு கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சுப் பேச்சாளர் வன்னிநாயக்க அகில இலங்கை செவிலியர்கள் சங்கத்தின் எபோலா தொடர்பான குற்றச்சாட்டை மறுத்துள்ளார். முதலும் ஹன்குரான்கத்த பகுதியில் இறந்த ஒரு பெண் எபோலா தொற்றுக்கு இலக்காகியே மரணித்தார் என மிகைப்படுத்தல்கள் இருந்தன. இருந்த போதிலும் மருத்துவ பரிசோதனைகளின் பின் அது பொய்யான வதந்தி என நம்பப்பட்டது.



அதுபோல்லவே இப்போதும் வாந்திகள் பரவுகின்றன எனக் கூறினார். மேலும் தாம் அவ்வாறானதொரு நிலைமை ஏற்படும் பட்சத்தில் அதற்குத் தேவையான அவசர மருந்துகள், தடுப்பு மருந்துகள் மற்றும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தும் தயார்நிலையிலேயே உள்ளதாக தெரிவித்தார்.

நாட்டில் ஒரே ஒரு விமான நிலையம் எனவே அதனை மிகக் கவனமாக கண்காணித்து வருகின்றோம் எனவும் கூறினார்.

இருந்தபோதிலும் எபோலா பரவுவது குறித்து ஒரு உலகளாவிய ரீதியில் சிவப்பு எச்சரிக்கை இருந்த வேளையில் அத்தகைய ஒரு நோயாளி நாட்டுக்குள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், சுகாதார அமைச்சு கவனயீனமாக இருப்பதாகவும் அந்த சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## the Mirror

### மேலும் நால்வர் பதவியேற்பு

ஊவா மாகாண சபை அமைச்சர்களாக மேலும் நால்வர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை (16.10.2014), ஜனாதிபதி செயலகத்தில் வைத்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டனர். இவர்கள் ஊவா மாகாணத்தின் முன்னேற்றத்திற்காக பதவிப்பிரமானம் செய்து கொண்டனர்.



### கரையொதுங்கிய திமிங்கலம்



மட்டக்களப்பு மாவட்டத்தின் செட்டிபாளையம் கடற்கரையில் நேற்று வியாழக்கிழமை மாலை இராட்சத திமிங்கிலமொன்று உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. இந்தத் திமிங்கிலம் 60 அடி நீளமும் 12 அடி அகலமும் கொண்டதாகவுள்ளது.

இந்தத் திமிங்கிலத்தை பகுப்பாய்வு செய்வதற்காக தேசிய நீரகவளங்கள் ஆராய்ச்சி அதிகாரசபை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.டொமிங்கோ ஜோர்ஜ் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பார்ப்புக்களுடனே மரித்துப் போகும் தமிழரின் அரசியல்

அரசியல் ஆய்வு

**தேத்தாமரத்தான்**



எதிர்பார்ப்புகளுடனேயே மரித்து போகும் தமிழரின் அரசியல் ஈழத்தமிழர்கள் எப்போதுமே எதிர்பார்ப்புகளுடனேயே வாழ்ந்து போகத்தலைப்பட்டவர்கள். எப்போதுமே அரசியல் அரங்கில் தங்களுக்கான துரும்புச்சீட்டுகள் மற்றவரினாலேயே ஆடப்படவேண்டும் என்ற கருத்தில் ஊறித்திளைத்துக் கொண்டிருப்பவர்கள். இது ஏன் என்பது இன்னும் எனக்கு புலப்படாத விடயமாகவே உள்ளது. யதார்த்தங்களை மறந்து ஏதோவொரு கற்பனை உலகில் சஞ்சரித்து மனக்கோட்டைகளை எழுப்பி கொள்கிறார்கள். பின்னர் தங்கள் எண்ணம் பொய்த்து போனதன் பின்னர் சீச்சீ இந்த பழம் புளிக்கும் என்று விலகி போதலே தமிழரின் செயலாற்றுகைகளாக உள்ளது.

காலமும் சுண்டெலியுடன் விளையாடும் பூனை போல அவ்வப்போது அவர்களின் ஆசைகளுக்கு தீ வளர்த்து கொண்டேயிருக்கிறது. எப்போதும் இறுதியில் பூனைக்கு பலியாகும் எலியாகவோ அல்லது விளக்கில் விழுந்த விட்டில் பூச்சியகவோ தமிழரின் அரசியல் இருந்து கொண்டிருக்கிறது. மோடியுடன் இவர்கள் திருந்தி கொள்வார்கள் என்றிருந்தேன். இப்போது இன்னொரு கோட்டைக்கு அடித்தளம் இடப்படுகிறது. அந்த கனவு கோட்டையின் நாயகி ஹிலாரி கிளின்டன்.

அண்மையில் பிரபல்யமான இணையத்தளம் ஒன்றை பார்வையிட்டு கொண்டிருந்தேன். அங்கே ஒரு அரசியல் ஆய்வாளரின் விளாசல் பதிவாகி இருந்தது. விரைவில் நடக்க இருக்கும் அமெரிக்க சனாதிபதி தேர்தலில் திருமதி. ஹிலாரி கிளின்டன் அவர்கள் போட்டியிட்டு வெல்வதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் அவரின் கருணைப்பார்வை ஈழத்தமிழரின் சாபவிமோசனமாக அமையும் என்றும் ஆருடம் கூறியிருந்தார். உண்மையிலேயே தமிழர்களை சுயசிந்தனை அற்ற சமூகமாக ஆக்குவதில் பரபரப்பையும் விற்பனை நோக்கையும் மாத்திரம் கருத்தில் கொண்டு செயல்படும் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவைகள் பத்திரிகைகள், வலைத்தளங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் என பலதிறப்படும். போர்க்காலங்களில் யதார்த்த நிலையையும் களத்தின் போக்கையும் கருத்தில் கொள்ளாது தமிழர் தரப்பின் வெற்றி உறுதி என்பதை பறைசாற்றி கொண்டிருந்தன. அதன்பின்னர் சர்வதேசம் தமிழர்பக்கம் நிற்பதாக கூறி கூறியே எம்மை அரசியல் வங்குரோத்து நிலைமைக்கு தள்ளி விட்டுள்ளன குறித்த சில ஊடகங்கள்.

உண்மையில் அமெரிக்கா என்றால் என்ன என்பதை அறியாத அரசியல் விமர்சகர்களா எம்மிடையே உள்ளனர் என்பது நகைப்புக்குரியதும் வியப்புக்குரியதுமாகும். அமெரிக்கா என்பதும் ஒரு வல்லாதிகமே அங்கு சிறுபான்மை இனங்களின் விடுதலை என்பதும் நலன்கள் என்பதும் செல்லாக்காசுகளே. எமது விடுதலை போராடத்தின் பரிமாண தேக்க நிலைக்கு முக்கிய காரணம் உலகின் அனைத்து விடுதலை போராட்டங்களையும் பயங்கரவாதம் என்ற சாக்குக்குள் மறைத்த அமெரிக்காவின் மூலாபோய கோட்பாட்டு நிகழ்ச்சி நிரலேயாகும். அதன் பிரதிபலன்களே இன்றைய நமது தொடர் அவல நிலையாகும்.

போர் தீவிரமாக இடம்பெற்று கொண்டிருந்த நாட்களிலேயே சிறுபான்மை இனங்களின் விடிவெள்ளி என கருதப்பட்ட ஒபாமா அவர்கள் ஆட்சிபீடமேறினார்கள். அவரை முன்னிறுத்தி 'ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு' என்று ஒரு பதாகைத்தனமான இயக்கமும் தொடங்கப்பட்டது. நடந்தது என்ன? ஈழத்தமிழரை காப்பாற்ற முடிந்ததா. சரி நமது விடயத்தை விடுங்கள். இன்றுவரை அமெரிக்காவின் ஆதிக்க போக்கில் மாற்றம் ஏதும் ஏற்பட்டு உள்ளதா. புஷ் அவர்களின் வழியிலேயே இவரின் பயணமும் தொடர்கிறது. இதில் சுவாரஸ்யம் என்னவெனில் குறித்த அந்த வித்தகர் ஒபாமா மீதும் விமர்சனங்களை முன்வைத்தமைதான்.

ஒபாமாவையோ அல்லது வேறு யாரையுமே இந்த விடயத்தில் குறை கூற முடியாது. ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளில் கொள்கை வகுப்புகளை மேற்கொள்வது diplomatic elites எனப்படும் குழாமே. அவர்களின் விடயங்களில் இலங்கை போன்று அரசியல்வாதிகள் குறுக்கிட முடியாது. அரசியலுக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் வெளிப்படையாக இராது. சில தருணங்களில் ஆட்சி பீடத்தை விட இந்த குழுமமே அதிகாரம் பொருந்தியதாய் அமையும். இந்த குழுமத்தின் கொள்கை வகுப்புக்கள் அமெரிக்க நலனை பாதுகாப்பதாகவும் வளச்சுரண்டல்களை ஊக்குவிப்பதாயுமே அமையும்.

உண்மையில் அமெரிக்கவிற்கும் இலங்கைக்கும் இடையிலான முறுகல் என்பது பொருத்தமற்ற பரஸ்பர புரிந்துணர்வின்மையின் (improper mutual understanding) நீட்சியே ஆகம். எதிர்பார்க்கப்படும் ஆட்சி மாற்றம் இலங்கையில் சாத்தியப்படுமாயின் அது மழை நீரினால் மூடப்படும் குழி போல மறைந்து போய் விடும். ஏனெனில் ஐ.தே.க ஆட்சிகாலங்களில் சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியா என்பன சமதூர இடைவேளிகளியே வைத்துப் பேணப்பட்டன. எனவே ஆட்சிமாற்ற கருதுகோள் நிதர்சனமாகும் பட்சத்தில் இப்போது தமிழர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் சர்வதேச கனவுகள் கலைவது நிதர்சனமானதே.

சரி அந்த வித்தகரின் கனவு போல அமெரிக்க ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டால் தமிழருக்கான விடிவு சாத்தியாகுமா என்றால் இல்லை என்பதே பதிலாய் அமையும். இலங்கையின் கேந்திர முக்கியம் கருதி அதனை ஒரேயடியாக பகைத்துக் கொள்ள அமெரிக்க கொள்கை வகுப்புக்கள் இடம் தராது. திருமதி.ஹிலாரி அவர்களினால் ஒரு கட்டத்துக்கு மேல் இலங்கை அரசின் மேல் இந்த விடயத்தில் அழுத்தங்களை பிரயோக்கிக்க முடியாது. ஆட்சியில் ஐ.தே.க இருந்தால் அது மென்மையான அழுத்தமாயும் இப்போதைய ஆட்சி தொடர்ந்து இருப்பின் சற்று கடுமையான அழுத்தமாயும் இருக்கும். இதைதவிர வேறு ஒன்றுமே எந்த அமெரிக்க சனாதிபதியினாலும் இலங்கையில் சாதிக்க முடியாது.

தீர்வு திட்டம் என்று வருகையில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட இங்கு சமஸ்டி ஆட்சியை அமுலாக்க முடியாது. பதின்மூன்றாம் திருத்த சட்டத்துக்குட்பட்ட மாகாண சபை முறைமையே இலங்கையில் அமுலாக்கபடக்கூடிய அதியுட்ச தீர்வாக இருக்கிறது. அதிலும் ஐ.தே.க ஆட்சிக்கு வந்தாலும் காணி மற்றும் போலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது நிச்சயமில்லை. ஏனெனில் சிங்கள மக்களுக்கு எதிராகவோ மகா சங்கங்களுக்கு எதிராகவோ செயற்பட இலங்கையின் அரசியலமைப்பில் இடமில்லை. எனவே இலங்கை அரசமைப்புக்கு உட்பட்ட வகையில் இலங்கை அரசுடன் பேசி தீர்க்குமாறு ஆலோசனை வழங்குதலே கிலாரி அவர்களின் ஆக கூடிய பணியாக இருக்கும் அவர் ஆட்சிபீடமேறும் பட்சத்தில்.

எமது அரசியல் பரப்பில் விவாதிக்கப்படும் இன்னொரு விடயமாக ஐரோப்பிய நாடுகளில் புலிகளின் தடை தேவையற்றது என்ற ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்மானம் மாறியுள்ளது. புலம் பெயர் தமிழ் அமைப்புக்களிடையே இதை யார் செய்தது என்பதில் பலத்த போட்டியே நிலவுகிறது. உண்மையில் இது தமிழர் தரப்பினால் கொண்டாடக்கூடிய விடயமா என்றால் இல்லை என்பதே பதில். தாயகத்தில் அந்த அமைப்பின் வேரே இல்லாத ஒரு கட்டத்தில் இதனால் எந்த பயனையும் தமிழர் தரப்பு அடையப்போவதில்லை.

மாறாக சும்மா இருந்த கொழும்பை இந்த தீர்ப்பு உசுப்பி விட்டுள்ளது என்பதே உண்மை. இப்போது கொழும்பு ஐரோப்பிய நீதிமன்றுக்கு இந்த தடை நீக்கம் நியாயமற்றது என மனு ஒன்றை சமர்ப்பிக்க ஓடித்திரிகிறது. சரியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு இந்தியாவின் அனுசரணையும் கிடைக்கும் பட்சத்தில் இந்த தடை நீக்க உத்தரவு நிறைவேற்றபடாமலும் போகலாம். வெடிக்கப்பட்ட பட்டாசுகளின் கரிகள் மட்டுமே நமக்கு மீதமாக இருக்கும். இதனை விட ஐரோப்பிய சங்கத்தில் அழுத்தங்களை கொடுக்க கூடிய நாடாக கருதப்படும் பெரிய பிரித்தானியா மற்றும் நெதர்லாந்து, அயர்லாந்து போன்றவற்றுக்கு இந்த விடயத்தில் பெரியளவு உடன்பாடில்லை. இந்த மூன்று நாடுகளின் எதிர்வினையுடன் இலங்கை இந்திய அரசுகளின் வாதங்களும் கைகோர்த்தால் மூன்று மாதங்களின் பின்னரும் புலிகளின் தடை நீடிக்க கூடிய சாத்தியங்களும் நிறையவே காணப்படுகின்றது. இப்போது சந்தோசம் கொண்டாடுவோர் இதையும் கொஞ்சம் கருத்தில் கொள்ள வேண்டும்.



இந்திய அரசியலிலும் எமது அணுகுமுறைகள் தோல்வி கண்ட ஒரு விடயமாகவே இருக்கிறது. கடந்த அரசினை விட இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் இலங்கை இந்திய உறவுகள் சகல வழிகளிலும் மேம்பட்டதாகவே இருக்கிறது. கூட்டமைப்புடனான சந்திப்பு என்பது கொழும்பு சீனாவுடன் காட்டும் நெருக்கத்தின் அதிருப்தியின் விளைவேயன்றி தமிழர்பால் ஏற்பட்டுள்ள கருணை அல்ல. அவ்வாறு யாரேனும் கற்பிதம் செய்து கொண்டால் அவர்களின் அறிவு பரிதாபத்துக்குரிய நிலையில் உள்ளது என்றே கூறலாம். பதிமூன்றாம் திருத்த சட்டத்தை அமுல் செய்யுங்கள் என்று கூறி கூறியே மோடியின் ஆட்சிக்காலம் நிறைவுக்கு வந்து விடும். பின்னர் புதிய காட்சிகள் புதிய நம்பிக்கைகள் ஆனால் தமிழரின் இருப்பு மட்டும் உலக்கை தேய்ந்து உளியான நிலையிலேயே இருக்கும்.

இந்திய மேலாதிக்கங்களின் கருணைக்காக காத்திருக்கும் நாம் இந்திய அரசின் சிறுபான்மை இனங்களின் மீதான அடக்குமுறை பற்றி சிந்திப்பதே யில்லை. காஸ்மீரில் இந்திய அரசின் அடக்குமுறைகள் சொல்லும் தரமன்று. எமது ஊடகப்பரப்புக்களோ அல்லது அரசியல் கட்சிகளோ அவற்றை இருட்டடிப்பு செய்து விடுகின்றன. குஜராத்திலும் காஸ்மீரிலும் சிறுபான்மை முஸ்லிம்களை பீதியுடன் வாழ வைத்துள்ள இந்திய அரசிடம் நியாயம் பெற முயற்சி செய்தலானது கசாப்புக்கடைக்காரனிடம் நியாயம் கேட்கும் வெள்ளாட்டின் நிலைமையை ஒத்ததே.

ஆட்சி மாற்றம் தமிழருக்கு விடிவு தரும் என்ற ஒரு மாய பிம்பம் ஒன்று இப்போது தமிழரிடையே கட்டி எழுப்பபப்படுகிறது. ஐ.தே.க ஒன்றும் சாதுக்கள் அடங்கிய கட்சி அல்ல. ரணிலை விட சஜித் ஏன் சிங்கள மக்களால் விரும்பப்படுகிறார் என்பதை ஆராயும் ஒருவருக்கு ஐ.தே.க வின் சுயஷரூபம் விளங்க வரும். பச்சையோ சிவப்போ நீலமோ எதுவாயினும் தமிழர் உரிமைகள் என்று வருகையில் ஒன்றுதான். அதனால் ஆட்சி மாற்றத்தின் பின் வரும் சொர்க்கலோகம் என்பது கானல் நீரேயன்றி வேறல்ல. அடுத்த சனாதிபதி தேர்தல் என்பது இனவாத கருத்துக்கள் விசமாக அள்ளி வீசப்படும் ஒன்றாகவே இருக்கப்போகிறது. இது சாதாரண சிங்கள மக்களிடமும் சிறுபான்மையினர் பற்றிய அச்சங்களையும் சந்தேகங்களையும் விதைத்து விடக் கூடியது. ஐரோப்பிய நீதிமன்ற தீர்ப்பு விடயத்தில் மோதிக்கொள்ளும் இரு கட்சிகளையும் பார்க்கும் போது இனவாதத்தில் இரண்டு கட்சிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்றே தோன்றுகிறது.

ஆமை ஆயிரம் முட்டை இட்டு அமைதியாய் இருக்குமாம் கோழி ஒரு முட்டை இட்டு ஊரைக்கூட்டுமாம் என்பது முதமொழி. இப்போது இருக்கும் உரிமைகளை தக்க வைத்து கொள்ள ஆமை போன்று அமைதியாய் இருந்து சாதிக்கும் அரசியலே தமிழருக்கு தேவை. உணர்ச்சி பூர்வ கருத்தியல்களை விட்டு விலகி யதார்த்த உலகின் தரிசனங்களை உள்வாங்கி என்று தமிழர் தரப்பு நகர்கிறதோ அன்றுதான் தமிழரின் சாபவிமோசனம் சாத்தியமாகும். தாயக, தமிழக புலம்பெயர் உறவுகள் இதை கவனத்தில் கொள்வார்களா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் உங்கள் சந்தோசத்தை பறித்தது??

... நாட்டு நடப்பு ...

நிலத்தை அளக்கும் திணைக்களத்தின் அநேகமான கள உத்தியோகத்தர்களின் வாழ்நாளில் முக்கால் வாசிக் காலம் காட்டுப் பிரதேங்களுக்குள் கழிந்துவிடுகின்றன. கொக்குவில் தொழிநுட்ப கல்லூரியில் கற்று நிலஅளவையாளர் பரீட்சையில் சித்தி பெற்ற பின் பயிலுனராக அவன் இணைக்கப்பட்ட பிரதேசம் புல்மோட்டையை சார்ந்த யான்ஓயா பகுதியாகும்.

1970ம் ஆண்டு காலப்பகுதியில் யான்ஓயா அணைக்கட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அத்திட்டம் பாரிய நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டங்களில் ஒன்றாகும் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பு (ஐஊநுழு) அவ் வேலைத்திட்டத்தை அன்று பொறுப்பேற்று நடாத்தி வந்தது.

மேலும் பயிலுனர் நிலஅளவையாளரான கணேசனும் அத்திட்டத்திலே பணிபுரிந்து வந்தான். நிலஅளவை ஊழியர்கள் எந்த இடத்திற்கு தொழிலின் நிமித்தம் சென்றாலும் தண்ணீர் பெறக்கூடிய மற்றும் நாளாந்த வசதிகளை கவனத்தில் கொண்டே அங்கு



முகாம்கள் அமைக்கப்படுவது வழமை.

யான் ஓயா அணைக்கட்டுத் திட்டம் ஒரு பாரிய திட்டமென்பதால் சுமார் ஐந்து வருடங்கள் அந்த காட்டுக்குள்ளே கணேசனுக்கும் சக ஊழியர்களுடன் காலத்தை கழிக்க நேர்ந்தது. அந்த முகாம்களில் சுமார் ஐம்பது பேர் தொழிலின் நிமித்தம் தங்கி இருந்தனர். சிலருக்கு அந்த காட்டு வாழ்க்கை மிகவும் பிடித்திருந்தது.

சிலர் நோய்வாய்ப்பட்டு வேறு நகர்ப்புறங்களுக்கு இடமாற்றப்பட்டனர். ஆனால் கணேசன் அந்த முகாம் வாழ்க்கையை விரும்பியிருந்தான். காலையில் நிலஅளவை உபகரணங்கள் மற்றும் காடு துப்பரவாக்கும் கத்தி, கைநீள வெட்டுக்கத்தி, கோடாரி, மண்வெட்டி ஆகியவற்றுடனே அந்த வேலைக் குழு புறப்பட்டுச் செல்லும். முகாங்களை பாதுகாக்கவும், உணவு தயாரிக்கவும் ஒரு பிரிவினர் முகாங்களில் தங்கிக் கொள்வர்.

மாதா மாதம் அந்த வேலை குழுவினர்களிடையே கடமைகள் மாற்றி வழங்கப்படும். தலைமை நில அளவையாளரே சகல நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருந்து வழிநடத்திச் செல்வார். அவர்களின் உள்ளக போக்குவரத்திற்காக ஒரு பிக்கப் வாகனம் வழங்கப்பட்டிருந்தது.

கணேசனின் பிறப்பிடம் சாவகச்சேரி. அவன் இன்னமும் பிரம்மச்சாரியாகவே வாழ்ந்து வருகிறான். அவனது மூன்று சகோதரிகளுக்கும் ஏற்கனவே திருமணமாகி விட்டதால், வீட்டுக் கஷ்டங்கள் என்று கூறுவதற்கு பெரிதாக இல்லை. இருப்பினும் வயது முதிர்ந்த பெற்றோரை கவனிக்க [illegible] அவன் மேல் சுமத்தப்பட்டிருந்தது. அவர்களை அவ்வப்போது பார்த்துக் கொள்வதற்காக அவனது சிறிய தாயார் உதவியாக இருந்ததால், அங்கு பிரச்சினைகள் உருவாக இடமிருக்கவில்லை.

யான்ஓயா நில அளவை ஊழியர்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்ய புல்மோட்டை கடைப்பகுதிக்குச் செல்வார்கள். அந்த பிக்கப் வாகனம் நிறைய தங்களுக்கு ஒரு மாதத்திற்கு போதுமான அத்தனை பொருட்களையும் வேண்டிக் கொள்வார்கள். சகலரிடமும் அலைபேசி வசதி இல்லாததினால் தங்கள் தங்கள் குடும்ப நிலவரங்களை அறிந்து கொள்ள புல்மோட்டை தபாலகத்தின் தொலைபேசியை உபயோகித்துக் கொள்வார்கள்.

மேலும் அந்த அந்த வாகனம் அவர்களுக்கு பெரும் உதவியாக இருந்தது. பிரதம நில அளவையாளர் அங்குள்ள சகல ஊழியர்களையும் தமது குடும்ப அங்கத்தவர்கள் போன்றே கவனித்து வந்தாலும் கடமை விடயத்தில் மிகவும் காரசாரமாகவே இருந்து கொள்வார்.

அத்துடன் கணேசன் பயிலுனர்

எனபதால் அன்றாடம் அவனுக்கு தேவையான தொழில் விடயங்களை கற்றுக்கொடுக்க அவர் என்றுமே பின்நின்றது இல்லை. வீட்டுக்குச் செல்ல லீவு பெறுவதுதான் ஒரு கஷ்டமான காரியமாக இருந்தது. மற்றும்படி அனைத்து சுதந்திரங்களும் அந்த முகாம்களில் சகலருக்கும் கிடைத்து வந்தன.

ஊழியர்கள் யான்ஓயா அணைக்கட்டு திட்டப் பகுதியில் இருந்து புல்மோட்டைக்கு அடிக்கடி சென்றுவருவதால் பல நண்பர்களை அங்கு அவர்கள் தேடிக் கொண்டார்கள். கணேசனும் புல்மோட்டைக்குச் சென்றால், சம்மாட்டியார் சண்முக சுந்தரத்தின் வீட்டுக்கு செல்லத் தவறுவதில்லை. புல்மோட்டை ஒரு முஸ்லீம் பிரதேசம் என்றாலும் தமிழ் மக்களும் அங்கங்கே வாழ்ந்து வந்தனர். சம்மட்டியாரிடம் தொழில் புரிபவர்களில் அநேகம் பேர் முஸ்லீம்களாக இருந்தனர். கணேசனின் குணாதிசயங்கள் சம்மட்டியாரைக் கவர்ந்திருந்தன.

சம்மட்டியாரிடம் எந்தவித பேதங்களும் இல்லை. அவர் அங்குள்ளவர்கள் அனைவரோடும் மிக அன்பாக பழகும் சுபாவத்தை கொண்டவர். கணேசனின் நடத்தையில் திருப்தி கொண்ட சம்மட்டியார் தனது ஒரே மகளான சரஸ்வதியை கணேசனின் பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்து வைத்தார்.



திருமணத்திற்கு பின் கணேசன் வேலை முகாமில் தங்குவதில்லை. ஆனால் நேரத்திற்கு புல்மோட்டையிலிருந்து யான்ஓயா திட்ட முகாமுக்கு சென்றுவிடுவான். சம்மட்டியார் அவனுக்கு விலையுயர்ந்த மோட்டார் சைக்கிள் ஒன்றை அன்பளிப்பாக வழங்கி இருந்தார்.

கணேசன் மாதத்திற்கு ஒரு முறை சாவகச்சேரியிலுள்ளதனது வயது முதிர்ந்த பெற்றோரை மனைவி சகிதம் பார்க்க செல்வான். ஓரிரு வருடங்களுக்குப் பின் அவனுக்கு இரட்டை ஆண்குழந்தைகள் பிறந்தன.

கணேசன் தனது பயிலுனர் காலத்தினை திருப்தியாக பூர்த்தி செய்ததை அடுத்து அவனுக்கு நிரந்தர நியமனம் கிடைக்கப்பெற்றது. வாழ்க்கையில் தொடர்ச்சியாக சந்தோசங்கள் வருவது போன்று துன்பதுயரங்களும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக வருவதும் வழமை. இரு வருடங்களுக்குள் மூன்று துக்ககரமான சம்பவங்கள் அவனது வாழ்க்கையில் தொடர் சங்கிலி போன்று இடம்பெற்றன.

முதல் வருடத்தில் தனது தனப்பனை இழந்தான். அதைத் தொடர்ந்து சுமார் எட்டு மாதங்களுக்குப் பின் தாயாரை இழந்தான். இரண்டாவது வருட இறுதியில் மாமனாரான சம்மட்டியார் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். மேலும் கணேசனுக்கு வேலைப்பழு அதிகரிக்கவே அவனால் எதையும் சிந்தித்து செயல்படுத்த முடியாமல் தவித்தான். உதவிக்கு தனது மனைவி குழந்தைகளை விட வேறு யாருமே அவனுக்கு இருக்கவில்லை. போதியளவு பணம் இருந்தும் உற்றார், உறவினர் இன்றி சொல்லொண்ணா கஷ்டங்களை அனுபவித்தான்.

யான் ஓயா அணைக்கட்டு திட்டத்திற்கு பொறுப்பாக இருந்த பிரதம நில அளவையாளர் ஓய்வு பெற்று சென்ற பின் அந்த நில அளவை பிரிவுக்கு அவனே பிரதான பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டான். அலுவலக வேலைகள், மற்றும் மாமனார் விட்டுச் சென்ற மீன்பிடி தொழில் தொடர்பான வேலைகள் அனைத்தும் அவனை நிம்மதியற்றவனாக்கியது.

அவன் திடீரென சுகயீனமுற்றான். மன அழுத்தங்கள், ஓய்வின்மை அனைத்தும் பெருக்கெடுத்து அவனை புத்திசுவாதீன மற்றவனாக்கியது. அதனால் உடனடியாக முல்லேரியா அரசினர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

ஆனால் அவனது மனைவி மிகவும் கெட்டிக்காரி மாத்திரமல்ல குடும்ப பொறுப்பையும் சகல துன்பங்களையும் பொறுப்பேற்று அவனுக்கு உதவியாக இருந்தாள். அவனது குடும்ப நிலையை உணர்ந்த அவனது திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அவனுக்கு உதவி புரிய முன்வந்தனர்.

முல்லேரியா மருத்துவ மனையில் அவன் தேவையான சிகிச்சை பெற்றாலும் அவன் முன்னைய கணேசனாக எவரக்கும் தென்படவில்லை. ஞாபக சக்தியை இழந்தவனாகவும், அவனது பேச்சுத் தொடர்பாடல்கள் தெளிவற்றதாகவே காணப்பட்டன. தொடர்ந்தும் அவனால் கடமைக்கு செல்ல முடியாததினால் அவனது உயர் அதிகாரிகள் அவனை கட்டாய ஓய்வுக்கு உட்படுத்தி உரிய ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுத்திருந்தனர். அவனது மனைவியின் துணிச்சலை சகலரும் பாராட்டத் தவறவில்லை. அவனது இரட்டை பிள்ளைகள் இன்று வளர்ந்து பெரியவர்களாகி விட்டாலும், அவளது கணவன் இன்னும் ஒரு குழந்தை போல் இருக்கின்றான். அவளுக்கு அவன் மூனாறாவது குழந்தை.

இன்று அவன் ஓர நிரந்தர நோயாளி. அவனால் தனித்து எதையும் செய்ய முடியாத நிலை. அவனது மனைவியும், பிள்ளைகளும் என்றுமே அவனை கைவிட்டதில்லை. கணேசனுக்கு ஏற்பட்ட அந்த நிலையை ஊரார் கவலையுடன் பேசாத நாளே இல்லை. சில பிள்ளைகள் தம் பெற்றோரை புறக்கணித்து வாழும் இன்றைய சமுதாயத்தில் கணேசனின் பிள்ளைகள் அவனை அன்புடன் அரவணைத்து பார்த்து வரவதையிட்டு அவன் மனைவி மனதிற்குள்ளே அவர்களுக்கு புகழாரம் சூட்ட தவறவில்லை.

புல்மோட்டையிலுள்ள கனியவளங்கள் மற்றும் மணல் என்பவற்றுக்கு பொறுப்பான கூட்டுத்தாபனம் ஒன்று மிக முக்கியமானதாகும். அத்தொழிலகத்திற்கு யான்ஓயா அணைக்கட்டிலிருந்தே தேவையான நீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. நிரந்தர நோயுற்ற முன்னாள் நில அளவையாளரான கணேசனுக்கு உதவும் வகையில் அவனது இரு பிள்ளைகளுக்கும் கௌரவமான தொழில் வாய்ப்பை பிரதி அமைச்சர் ஒருவர் அக்கூட்டுத்தாபனத்தில் பெற்றுக் கொடுத்தார்

**- பாலையூற்றான் -**




## 5554 மீ - 6 வயது

நேபாள நாட்டில் உள்ள மிக உயரமான சிகரங்களுள் ஒன்று கல்பதரு என்ற மலைச்சிகரம். இந்த சிகரம் 5,554 மீட்டர் உயரம் உள்ளது. அந்த கல்பதரு மலை சிகரத்தில் ஏறி 6 வயது இந்திய சிறுவன் ஹர்ஷித் சவுமித்ரா என்பவன் உலக சாதனை செய்துள்ளான். இவரது தந்தை ராஜீவ் சவுமித்ரா என்பவரும் ஒரு மலையேறும் வீரர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த சாதனையை செய்வதற்காக, அவன் தனது தந்தை மற்றும் 2 வழிகாட்டிகளுடன் கல்பதரு சிகரத்திற்கு சென்றான்.





## பறக்கும் மனிதனா!

இங்கிலாந்து நாட்டில் உள்ள மான்செஸ்டர் நகரில் இருந்து ஏர்பஸ் 320 என்ற விமானம் கிளம்பியது. அந்த விமானம் சுமார் 200 முதல் 300 அடி உயரத்தில் பறந்தபோது விமானத்தின் இடது பக்கத்தில் ஒரு மனிதன் பறந்து செல்வது போன்ற காட்சியை கண்டு விமானப்பயணிகளும், பைலட்டும் திடுக்கிட்டனர். பாராசூட் மூலம் குதித்து சாகசம் செய்யும் வீரர்கள் அந்த பகுதியில் பறக்க வாய்ப்பே இல்லை என்ற நிலையில் அந்த பறக்கும் மனிதன் பெரும் மர்மமாம தென்பட்டான்.

## மகா நடிகன்



பிரித்தானியாவை சேர்ந்த ஹெலன் நைட் என்ற நபர் தனது பக்கத்தில் வீட்டிலுள்ள முதியவரிடம் அன்பாக பேசி அவரிடமிருந்து சுமார் 40,000 பவுண்டுகளை திருடியுள்ளார். இதுதொடர்பான வழக்கு ஸ்வான்சி கிரவுன் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்துள்ளது.

இந்நிலையில் தன் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டு விடும் என்பதால், ஹெலன் நைட் கடந்த 2 வருடங்களாக நீதிமன்றத்தில் ஆஜராவதைத் தவிர்த்தார். மேலும் தன்னை ஆஜராக அழைக்கும் பொலிசாரை ஏமாற்ற, தனக்கு கோமா வந்ததைப் போல் நடித்து வீட்டுக்குள் இருந்துள்ளார். இவனை கண்காணித்து வந்த பொலிசார், நேற்று முன்தினம் ஹெலன் காரை ஓட்டி செல்வதையும், அங்குள்ள மளிகை கடையில் அவனது மனைவியுடன் நடந்து செல்வதையும் கண்காணிப்பு கமெராவின் மூலம் [illegible]

## அந்தரத்தில் தொங்கிய குடும்பம்

ஜேர்மனியின் ரெயின் மாகாணத்தில் உள்ள கோலாங் உயிரியல் பூங்காவில் கேபிள் கார் சேவை உள்ளது. இதில் இரு குழந்தைகளுடன் தம்பதியினர் ஒருவரும், அமெரிக்காவை சேர்ந்த சகோதரர்களும் பயணித்துள்ளனர். அப்போது திடீரென அந்த கேபிள் கார் செயலிழந்து நின்றுவிட்டதால், அனைவரும் பயத்தில் உறைந்ததுடன் செய்வதறியாது திகைத்துள்ளனர். இந்நிலையில் தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்பு படையினர் அனைவரையும் பத்திரமாக மீட்டுள்ளனர்.

## அமெ. அதிபரிடமே பணமில்லை!!

நியூயார்க்கில் சில தினங்களுக்கு முன்பு தனது மனைவி மிச்சேலுடன் சேர்ந்து ரெஸ்டாரண்ட் ஒன்றிற்கு சாப்பிட சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா. தங்களுக்கு பிடித்த உணவுகளை சாப்பிட்டு முடித்தவுடன், வெயிட்டர் பில்லை கொடுத்துள்ளார். ஒபாமா தனது கிரெடிட் கார்டை கேஷியரிடம் கொடுத்த உடன், ஸ்வைப் செய்த போது பணமில்லை என்று கூறி கார்ட் ரிஜெக்ட் ஆகிவிட்டதாம். இதன் பின்னர் மிச்செல் தனது கார்டை எடுத்துக் கொடுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டில் ஒரு மான்

## தொடர்கதை

அம்பை

சமையலறைக் கதவை அடைத்துவிட்டுக் கூடத்தின் வழியாகத் தான் அத்தை வருவாள். யாரும் தூங்கவில்லை காத்திருந்தனர். 'அத்தை கதை சொல்லுங்களன்' என்றனர்.

நின்று பார்த்து விட்டு அருகில் வந்து அமர்ந்தாள். பிள்ளைகளில் இருவரான காமாட்சியும், சோமுவும் மெல்ல ஊர்ந்து வந்து அவளின் இரு தொடைகளிலும் தலை வைத்துப்படுத்து அண்ணாந்து அவளைப் பார்த்தனர். மற்றவர்கள் தலையணைகளில் கைகளை ஊன்றிக் கொண்டனர்.

அத்தை களைத்திருந்தாள். நெற்றியில் வியர்வை மின்னியது. கண்களை மூடிக்கொண்டு யோசித்தாள்.

'அது ஒரு பெரிய காடு....' என்று ஆரம்பித்தாள்.

அந்தக் காட்டில எல்லா மிருகங்களும் சந்தோசமாய் இருந்தது. காட்டில பழ மரமெல்லாம் நிறைய இருந்தது. ஒரு சின்ன ஆறு ஒரு பக்கமா ஓடிச்சு. மிருகங்களுக்கு என்னவெல்லாம் வேணுமோ, எல்லாம் அந்த காட்டில சரியா இருந்தது. அங்கு வேடன் பயமில்லை. எல்லா காடு மாதிரி அங்கயும் காட்டுத்தீ, வெளி மனுசங்க வந்து மரம் வெட்டுறது, பட்சிகளை சுடுவது, ஓடம் பன்னியை சுடுவது இது போன்று நடக்காமலில்லை. இருந்தாலும் மிருகங்களும், பட்சிகளும் சந்தோசமாய் இருந்தன. இப்படி இருக்கிறப்ப ஒரு மான் கூட்டம் ஒரு நாள் தண்ணீ குடிக்கப் போச்சுது. அதுல ஒரு மான விலகிப் போயிடிச்சு. அது தான் பழகிய காடு போலல்லாமல் பயமாக இருந்தது மானுக்கு. தூரத்தில ஒரு வேடன் நெருப்பை மூட்டி அவன் அடிச்ச மிருகத்தை சுட்டுத் தின்னுட்டு இருந்தான். அந்த நெருப்புப் பொறி மானின் கண்ணுக்கு பட்டது. அது உடனே ஒளிஞ்சிக்கிட்டது.



இப்படி நெறய நாளு அலைஞ்சு திரிஞ்சது. பௌர்ணமி தினமன்று அது பயந்து கொண்டிருந்தவேளை, திடீரனு மந்திரக்கோல் பட்டமாதிரி அந்த மானுக்கு பயமெல்லாம் போயிடிச்சு. அந்தக் காடு அதுக்குப் பிடிச்சுப் போயிடிச்சு. காட்டோட மூலை முடுக்கெல்லாம் அதுக்குப் புரிஞ்சுப் போயிடுச்சு. வேறு காடாயிருந்தாலும், இந்தக் காட்டிலயும் எல்லாம் இருந்துச்சு. அருவி, மரம், செடி எல்லாம் இருந்துச்சு. மெல்ல மெல்ல அதன் கண்ணுக்கு மிருகங்கள், பட்சிகள் எல்லாம் தெரிஞ்சிச்சு. தேன் கூடு கூட மரத்தில தொங்கியது. சில நாட்கள் கழித்து அந்த மானுக்கு புதுக்காட்டோட இரகசியமெல்லாம் புரிஞ்சுச்சு. அதுக்கப்புறமா பயமில்லாம, அந்த மான் சந்தோசமா சுத்திச்சு. அதுக்கு புதிய நண்பர்களும் கிடைத்தனர்.

என கதையை முடித்தாள் அத்தை.

கூடத்தின் மற்ற பகுதிகள் இருண்டிருந்தன. இந்த பகுதியில் மட்டும் தான் வெளிச்சம். இருண்ட பகுதியை காடாய் கற்பனை செய்து, கதை கேட்ட குழந்தைகள் அந்த மானுடன் தோழமை பூண்டு முடிவில் சாந்தப்பட்டு போயினர். தலையணைகளை அணைத்து உறங்கிப் போயினர். நீளமும் மஞ்சளும் கறுப்பும் கலந்த முரட்டுத் துணி தலையணையில் சாய்ந்து ஒற்றைக் கண்ணைத் திறந்து உறக்கக் கலக்கத்தில் பார்த்த போது, எங்கள் நடுவே இரு கைகளையும் மார்பின் மேல் குறுக்காகப் போட்டு தன் தோள்களை அணைத்தவாறு, முட்டியின் மேல் சாய்ந்து கொண்டு தங்கமத்தை உட்கார்ந்து கொண்டிருந்தாள்.



அப்போது தான் அவளுக்கு அத்தையின் உண்மை நிலவரமும், அவளின் மன வேதனையும் புரிந்தது. அவளால் என்ன ஆறதல் கூறமுடியும்!!

முற்றும்.. .. ..

# யார் சொல்வார்கள் முடிவு

வானம் குமுறிக் கொண்டிருந்தது...... ஜானகியின் மனசைப் போல.... இந்தப் பதினாறு நாட்களாக அழுது அழுது அவள் முகம் வீங்கிப் போயிருந்தது. ஆனால் கண்கள், இன்னும் வற்றி விடவில்லை. ஒரு காலத்தில் வேல்விழி, மீன்விழி, மான்விழி என்றெல்லாம் அவன் கணவனால் வர்ணிக்கப்பட்ட அந்தக் கண்களிலிருந்து புது மரத்தில் கீறல் விழுந்ததும் பிதுங்கிக்கொண்டு வரும் பாலைப் போல வெதுவெதுப்பான நீர் சுரந்த வண்ணமாக இருந்தது.

வீட்டுக்கு முன்பாக தற்காலிகமாக சீனன் போட்டுவிட்டுப் போன தகரக் கூரையின் கீழாக உற்றத்தார் சுற்றத்தார் என்று பலரும் கூடியிருந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த நாற்காலிகள் ஒரு சீராக இல்லை. அவர்களின் எண்ணங்களைப் போல தாறுமாறாக இருந்தன.

சிலர் வட்டமான மேசையிட்டு ஆறு ஆறு பேராகத் துருப்புச்சீட்டுப் போட்டுக் கொண்டிருந்தனர். உலகமென்னும் வட்ட மேசையில் இறைவன் மனிதர்களைத் துருப்புச் சீட்டாகப் போட்டு விளையாடிக் கொண்டிருக்கிறான் என்பதை மறந்தே விட்டவர்கள் போல் அவர்களுக்கு அதிலே சுவாரஸ்யம்!

சில பெரியவர்கள் வெற்றிலையைப் போட்டுக் துப்பிக் கொண்டு ஜெயராமனைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களின் நடுவாக, நட்டுவைக்கப்பட்ட ஒரு கல்லின் அருகில் பலகாரப் படையலும் பூ மனமும் சூழ்ந்த இடத்தில் ஜானகியின் கணவன் ஜெயராமன் விற்றிருந்தார். உயிரோடு அல்ல படமாக!

ஜெயராமன் தெய்வமாகிவிட்டார். இன்றோடு பதினாறு நாட்கள் ஓடிவிட்டன. எப்படிப்பட்ட தவறு செய்தவனாக இருக்கட்டும் செத்த பிறகு உடனே அவன் தெய்வ ஸ்தானத்திற்கு உயர்ந்து விடுகிறானே!

ஜெயராமனின் படத்தையே கூர்ந்து பார்த்து விம்மினாள் ஜானகி. அவரோடு வாழ்ந்த காலத்தில் உண்டான அனுபவங்கள், இடையிலே ஏற்பட்ட கசப்புக்கள், திடீரென்று உண்டான திருப்பங்கள் யாவும் திரும்பத் திரும்ப அவள் நினைவுக் குளத்தில் நீச்சலடித்துக் கொண்டிருந்தன.

ஜானகிக்கு ஐம்பத்திரண்டு வயது. ஆனால் இந்தப் பதினாறு நாட்களுக்கு முன்பு அவளைப் பார்த்த எவரும் நாற்பது வயதுக்கு மேல் நிச்சயம் மதிக்க மாட்டர்கள். அப்படி ஓர் உடற்கட்டு அவளுக்கு. ஐந்து பிள்ளைகளுக்குத் தாயான பின்னரும் கூட அவளுடைய மேனிச் செறிவைக் கலைக்க முடியாமல் இயற்கை அவளிடம் களைத்துப் போயிருந்தது. ஆனால், அந்த இயற்கை இப்போது கர்வம் கொண்டிருந்தது. ஆம். ஜானகி இந்த பதினாறு நாட்களில் மிகவும் நொய்த்துப் போயிருந்தாள். எவ்வளவு பெரிய காற்றாக இருந்தாலும் தாக்குப் பிடித்து நடமாடிக் கொண்டிருக்கும் விளக்குச் சுடர் எண்ணெய் தீர்ந்ததும் தானாகவே அடங்கிவிடுவதில்லையா!

கையில் தேங்காய் எண்ணெயுடன் அங்கே நுழைந்த விமலா, அங்கிருந்த விளக்கிற்குத்தாராளமாக எண்ணெய் ஊற்றினாள். அவள்தான் ஜானகியின் மூத்த பெண். அவளுக்கும் கண்கள் சிவந்து போயிருந்தன. விளக்கில் எண்ணெய் ஊற்றும் போது அந்தச் சிவந்த விழிகள் ஒரு சில கணங்கள் தாயின் முகத்தின் மேல் படிந்து திரும்பின. அம்மாவைப் பார்க்க அவள் விழி மடைகள் மேலும் திறந்தன. விளக்கில் ஊற்றிய எண்ணெயோடு அவள் விழி நீரும் விழுந்து கலந்தது.

விமலாவுக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகளாகின்றன. இரண்டு விசுக்கட்டான் குழந்தைகளையும் அவள் கணவன் ராகவன் வெளியில் வைத்துக் கொண்டிருந்தான். எண்ணெய் ஊற்றிவிட்டுத் திரும்பிய விமலாவை நிமிர்ந்து பார்த்த ஜானகி துக்கத்தை அடக்க முடியாமல் அவளைக் கட்டிக் கொண்டு "ஓ" வென்று அழுதாள். அந்தக் காட்சியைக் காணப் பொறுக்காமல் அங்கிருந்த பெண்கள் அனைவரும் அழுதனர்.

வெளியில் வெற்றிலை குதப்பிக் கொண்டிருந்த சில கிழடுகள் கண்களில் மல்கிய நீரை ஆள்காட்டி விரலால் வழித்துச் சுண்டியும், கட்டை விரலால் தேய்த்தும் விட்டுக் கொண்டன. தன்னுடைய இறப்புக்காக அழ முடியாத மனிதப் பிறவி, பிறருக்காகவாவது ஒரு சொட்டுக் கண்ணீர் விடவேண்டாமா? "யாராவது அழுகையை அடக்குங்க" என்று வெளியிலிருந்து ஒருவர் குரல் கொடுத்தார். கூடத்திலிருந்த பெண்கள் சிலர் அந்த முயற்சியில் இறங்கினர். சற்று நேரத்தில் அமைதி நிலவியது.

கொஞ்ச நேரம் அரற்றி அழுததால் சற்றே கலைந்த ஜானகியின் அலங்காரத்தை மீண்டும் சரி செய்வதில் இரண்டொரு பெண்கள் முனைந்தனர். தலை நிறைய பூவும், நெற்றி கொள்ளாத குங்குமத் திலகமும், கழுத்து நிறைந்த நகைகளும், இரு கை தொய்ந்து விழும்படியாக வளையலுமாக ஜானகி சர்வஅலங்கார பூஜிதையாக அமர்த்தி வைக்கப்பட்டிருந்தாள். கணவனை இழந்த கைம்பெண்ணை இப்படி அலங்காரம் செய்து வைத்து பதினாறாம் நாள் கிரியையின் போது ஆவேசம் வந்தவர்களைப் போல் அவளுடைய அணிகலன்களை ஒவ்வொன்றாகப் பறித்து சுமங்கலியைப் பலபேர் நடுவே அமங்கலியாக்கிப் பார்க்கும் அந்த நமது மரபு வரிசை இன்று ஜானகிக்கும் நடக்கப் போகிறதோ! அதற்காக அவளுக்கு இத்தனை அலங்காரமோ!

ஜானகி மூக்கும் முழியுமாக ஒரு கணம் நிதானித்துப் பார்க்கும் அழகியாக அந்த லாயர் வீட்டில் வேலைக்குச் சேர்ந்த போது ஜெயராமன் அங்கே டிரைவராக வேலை பார்த்துக் கொண்டிருந்தார்.

யாருமில்லாத அனாதையாக இனிமேலும் சொந்தக்காரர் களுக்குப் பாரமாக இருக்க வேண்டாம் என்ற முடிவோடு ஜானகி அங்கே வேலைக்கு வந்த சமயம் வாலிப முறுக்கோடு இருந்த ஜெயராமன் சும்மா அவளைச் சீண்டவும் அது அவளுக்கு ஒத்துப் போகவும் வெகு சீக்கிரம் அவர்களுக்குத் திருமணம் நடந்தது! அதைவிட வெகு சீக்கிரம் அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தன.

விமலாவை அடுத்தடுத்து கோகிலாவும் யசோதாவுமாக இரண்டு பெண்கள். மூன்று பெண்ணாக பிறந்துவிட்ட ஏமாற்றமோ அல்லது டிரைவர் வேலை என்றாலே ஓரிடத்தில் நிலையாக இருக்க முடியாது ஓடிக்கொண்டேதான் இருக்க வேண்டும் என்ற சித்தாந்தமோ தெரியவில்லை. திடீரென்று ஒரு நாள் ஜெயராமன் காணாமற் போய்விட்டார்.

அப்போது கடைசிப் பெண் யசோதாவுக்கு ஒரு வயதுதான் ஆகியிருந்தது. ஜானகி, சிறகில் அடிபட்ட பறவைபோல் தவித்தாள். எங்கெல்லாமோ ஓடினாள், யார் யாரிடமோ விசாரித்தாள், விசாரிக்கச் சொன்னாள். ஆனால், ஜெயராமனின் மறைவு, மெய்வழிச்சாலை சாமியாரின் மறைவு மாதிரி மர்மமாகவே போய்விட்டது.

மூன்று பிள்ளைகளையும் தெரிந்தவர்கள் வீட்டில் விட்டு வேலைக்குப் போவதும், மாலையில் பிள்ளைகளை வீட்டுக்கு இட்டு வந்து சோற்றுக் கஞ்சி ஊற்றுவதுமாக இரண்டு வருடங்களை ஓட்டினாள் ஜானகி.

அந்தச் சிரமமான நேரத்தில்தான், அவளுடைய வாழ்க்கையில் சுந்தரம் வந்து கலந்துகொண்டான். கட்டையில் செய்து கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்ட கனிகள் வேண்டுமானால் அப்படியே இருக்கலாம். செடியில், கொடியில், மரத்தில் இருக்கும் கனிகளால் அப்படியே இருந்துவிட முடியுமா? நொந்து போன ஜானகிக்குச் சுந்தரத்தின் துணை அப்போது இதமாகவும் இன்றியமையாததாகவும் இருந்தது.

சுந்தரமும் அவளிடம் ஒரு பண்புள்ள மனிதனாகவும் பொறுப்புள்ள கணவனாகவும், கடமையுள்ள தந்தையாகவுமே நடந்து கொண்டான். அவனுக்குப் பிறந்த இரண்டும் ஆண் பிள்ளைகள். ஆனால், ஒரு நாள் கூட அவன் தனக்கு இரண்டு பிள்ளைகள் தாம் என்று எண்ணியதே இல்லை. ஏதோ ஒரு விடுபட்ட தொடர்பு மீண்டும் ஒட்டிக் கொண்டதைப் போல் அவர்களுடைய வாழ்க்கை நடந்தது. என்றாவது ஒரு நாள் ஜெயராமன் வருவானோ என்ற உறுத்தல் ஜானகிக்கு இருந்ததுண்டு. ஆனால் அந்த உறுத்தலே மக்கிப் போகும் அளவுக்குக் காலமும் ஜெயராமன் என்ற நினைவையே தேய்த்துவிட்டிருந்தது.

மூத்தவள் விமலா, அடுத்தவள் கோகிலா. இருவரின் திருமணத்தையும் எந்தக் குறையுமில்லாமல் சுந்தரமே செய்து வைத்தான். அடுத்து இருபத்திரண்டு வயதை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் யசோதாவுக்கும் அவன் நிச்சயம் நல்லது செய்து வைக்கத்தான் போகிறான். சுந்திரத்திடம் இருக்கும் இந்த நல்ல குணத்தை அவன் தன்னிடம் வந்து சேர்ந்த சில மாதங்களிலேயே தெரிந்துகொண்டுதானோ என்னவோ ஜானகி அன்றொரு நாள் அவனிடம் அப்படிச் செய்யச் சொன்னாள்!

"இந்தாங்க, தன் கையால் கட்டின தாலிக்கு எந்த அர்த்தமும் இல்லாமப் பண்ணிட்டு அவரு போயிட்டாரு. அந்தத் தாலியை நானும் எந்த அர்த்தமும் இல்லாமப் போட்டுக்கிட்டிருக்கேன். இப்பவே இதைக் கழற்றி உங்க கையில தர்றேன். இந்த சாமி படத்துக்கு முன்னாடி நீங்களே இதை எனக்கு மாட்டிவிடுங்க" என்று சொல்லி உடனே அந்தத் தாலியைக் கழற்றவும் போன ஜானகியை சுந்தரம் தடுத்துவிட்டான்.

"ஜானகி புருசன் உயிரோட இருக்கானா இல்லையான்னு தெரிஞ்சுக்காம ஒரு பொண்ணு தன்னுடைய தாலியைக் கழட்டுறது ரொம்பப் பாவம், அதனால என்ன, தாலியைக் கழற்ற வேணாம். நீ இதுல இருக்கிற முடிச்சை என்கிட்ட காட்டு, அதை அவிழ்த்துவிட்டு புதுசா நானே மூணு முடிச்சு போட்டுடுறேன்". என்று மூன்று முடிச்சையும் அவிழ்த்துப் போட்டுவிட்டான் சுந்தரம்.

இது நடந்து எத்தனையோ ஆண்டுகள். யசோதாவுக்கு மூன்று வயதாக இருக்கும் போது நடந்தது இது. அதே யாசோதாவுக்கு இருபத்தொரு வயதாகும் போதும் ஒன்று நடந்தது. அன்று ஞாயிற்றுக்கிழமை. சுந்தரம் வீட்டில் இருந்தான். கதவைத் தட்டியது யாரென்று பார்க்க ஜானகி கதவைத் திறந்த போது அறுபது வயதை எட்டிப்பிடித்தபடி ஒரு கையால் வாசல் தூணைப் பிடித்தபடி நின்ற அந்த உருவத்தைப் பார்த்து ஜானகி கையும் ஓடாமல் காலும் ஓடாமல் கண் பிதுங்கிப் பேதலித்து நின்றபோது நிலைமையை உணர்ந்து கொண்ட சுந்தரம் "வாங்கண்ணே" என்று முகமலர்ச்சியோடு சொல்லியும் அதைத் தாங்கிக்கொள்ளத் திராணியில்லாமல் அந்த வீட்டு அஞ்சடியிலேயே படுத்தவர்தான் ஜெயராமன்.

அதன் பிறகு அங்கே அவர் இருந்த ஒரு வாரத்தில் இல்லறத்தில் ஏற்பட்ட விரக்தியால் ஓடிப்போனதாகவும், தங்கா மலையில் ஒரு சாமியாரிடம் அடைக்கலமாக இருந்ததாகவும் திடீரென்று குடும்பத்தின்பால் நினைவு வந்ததாகவும் அதனால் ஓடி வந்ததாகவும் புலம்பிக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு வலி வலி என்று கத்த, சுந்தரமும் ஜானகியும் பிள்ளைகளுமாக அவரை மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் போகும் வழியிலேயே உயிர் போய்விட்டது. அப்போதே ஜெயராமன் தெய்வமாகிவிட்டார். இன்று பதினாறாம் நாள் கரும்க்கிரியை செய்வதற்கு உற்றத்தாரும் சுற்றத்தாரும் வந்திருக்கிறார்கள். சற்று முன்புவரை இவர்களுக்குள் ஒரு பெரிய பிரச்சனை. விவாதித்துத் தீர்ப்புக்காண முடியாத பிரச்சனை.

ஜானகியின் கணவன் ஜெயராமன் இறந்துவிட்டான். அதனால் ஜானகி தாலி அறுத்துத்தான் ஆகவேண்டும்! இப்படிச் சொன்னவர்கள் ஜெயராமனின் சொந்தக்காரர்கள்.

"இத்தனை வருசமா உண்மையான கணவனா இருந்து, கஞ்சி தண்ணி ஊத்தி காப்பாத்துற சுந்தரம் உயிரோடதானே இருக்கான்! ஜானகி ஏன் தாலி அறுக்கணும்?" இப்படிக் கேட்டவர்கள் சுந்தரத்தின் சொந்தக்காரர்கள்.

ஜானகி ஜெயராமனின் படத்தையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள்! சுந்தரம் வந்திருந்தவர்களுக்குத் தேநீர் கொடுத்துக் கொண்டிருந்தான். விடிவதற்குள் முடிவு தெரிய வேண்டுமே! யார் முடிவு சொல்வது?



முற்றும்.. .. ..

- நவமலர்கள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## அவன் ஏழை தானே . . .

இன்று கண்டேன் - நீங்கள்
கூட . . . .

அவ் ஏழையோர்
முதிர் இளைஞன்
மயிர் நரைக்கத்
தொடங்கியிருப்பினும்
வாழ்வைச் சுவைக்கும்
வலு ... அவன்
முக ரேகைகளில்
வசீகரம் கூட்டியது . .

அவனுடைய உடலில் - ஒரு
இரு நூறு கிராம் தங்கம்
விரல்களில் பஞ்ச வர்ணத்
தங்க மோதிரம் . . .
கை மூட்டில் யானை
மயிர்க் காப்பு . .
பெறுமதி பெருக்கமாய்
போகினும்
அவன் ஓர் ஏழை . . .

நான் கண்டேன் - நீங்களும்
கூட

அவனது பணப்பை
மொத்தமாகவே
இருந்தது . . . தாள்களாலும்
அட்டைகளாலும் . . .

அவனது நண்பர்களோ
எமது கிராமத்து
எசமானர்களின் - குழந்தைகள்
எங்கள் வீட்டின்
விளையாட்டுப் பொருட்கள்
அங்கே உயிர்த்து உலாவுகின்றன ...
அவனது நண்பர்கள் . . .

உண்பதற்கு எதுவுமில்லை
என - அவன் அழுவதில்லை
உண்பது எதை என்றே
அவன் கிறங்கிப்
போவான் . . .

கேட்கமுதலே - உலகின்
போகங்கள் அவன் -
அந்தப்புரங்களை
நிறைக்கும் . . .
அவனோர் ஏழை

-- மாயன் --

அன்று
தெருவொன்றின் அந்தத்தில்
அவள் - அவனை
வெறுத்தொதுக்கிப் போனபோது. .

தெருவென்ற எண்ணமின்றி
பெருங்குரலில் அழுகின்றான் . . .
மூன்னே . . . பரந்து விரிந்த கடல்
முடிவின்றித் தொடரும் தெரு
எலும்பொன்றிற்காய் அலையும்
நாய்...
அவன் . . . . .
ஏழைதானே . . .





## தமிழினம்

நற்பண்பு நல்லொழுக்கம்
தமிழினத்தின் கவசங்கள்
சுத்த சைவ போசனத்தில்
மெத்தப் பிரிய மானவர்கள்!

மஞ்சள் குங்கு மத்தை
மங்கலமாய்க் கொள்பவர்கள்
தஞ்சமென்று வந்தவரை
தற்காத்து உதவிடுவார்!

ஆலய தரி சனத்தில்
நம்பிக்கை கொண்டவர்கள்
அறம் செய்ய விரும்புவதில்
அன்னையைப் போன்றவர்கள்!

கணவனைத் தெய்வமாக
காதலிப்பர் தமிழ்ப் பெண்கள்
மணவாளன் மரணித்தால்
மங்கலத்தை துறந்திடுவர்!

பெற் தாய் பிறந்தகத்தை
பிரியமாய் நேசிக்குமினம்
அற்புதத் தமிழ் மொழியை
அன்பாக விசு வாசிக்குமினம்

இந்து மதத்தின் பால்
சொந்தம் கொண்டாடு மினம்
பந்த பாசம் மாறாமல் என்றும்
பண்பாக வாழுமினம்!

சேனையூரான்

## முரசை முழக்கு



தமிழா தமிழா,
தமிழ்க்கே தீங்காம்
அழுதில் நஞ்சாம்,
அறிவாய் - ஆய்வாய்!

தரணியில் மூத்தோய்,
தருபவன் எவனோ?
வரவிடுவாயா?
வருமுன் காப்பாய்!

எரிவார் செயற்கு,
என்றுமே அஞ்சேல்!
அரிந்து குவி நீ!
ஆவிபோனால் போ!


ஊடகம் மட்டோ,
உயிரும் அதுவே!
வாட விடாதே,
வாழ்தமிழ்த் தாயை!

பாவாணர் ஆவி
பறந்தும் வரலாம்?
பாவேந்தர் புலிப்பா
பாயவுங்கூடும்!

முரசை முழக்கு!
முத்தமிழ் வாழ்த்து!
அரசிலை எனினும்,
ஆட்பேர் உண்டாம்?

குட்டுவன் மரபார்
கொணர்வார் மறுகல்!
கட்டாயம் புவி
காணவும் கூடும்?

- தாமரைத்தீவான் -
[ஈச்சந்தீவு, கிண்ணியா]



## வருகுதே!

பழம் நினைவுகள் கிளம்புதே,
பாட்டுப் பாட்டென வருகுதே!
இளம் பருவத்து நிகழ்வுகள்
இன்பம் துயரில் தருகுதே!

குல்லாவிலே வயல் போனதும்,
குடிலில் உறக்கம் கொண்டதும்,
நல்ல கதிர் சுட்டுத் தின்றதும்,
நடந்து வீட்டிற்கு வந்ததும்,

மூன்று துறைகள் கடந்ததும்,
மூதூரிலே கல்வி கற்றதும்,
தோன்று மலையகப் பள்ளியில்
தூய தமிழ் சொல்லிக் கொடுத்ததும்,

மட்டு நகர்க் கல்விப் பயிற்சியும்,
மற்றும் கண்தழையும் - உப்பாறும் ...
விட்டிடலாகுமோ? உள்ளதினும்
வேண்ட வரும் - பாடல் பாடுவமே!

- தாமரைத்தீவான் -
[ஈச்சந்தீவு கிண்ணியா]

## "தேடுவது"

வண்டுகள் தினம்
மலரைத் தேடுவதெல்லாம்
நல்ல தேனைச் சேர்ப்பதற்காக
மேகங்கள் தினம்
வானைத்தேடுவதெல்லாம்
மண்ணுக்கு
மழையைப் பொழிவதற்காக
மாணவர்கள் தினம்
நூலைத் தேடுவதெல்லாம்
வாழ்வில்
நல்லறிவைப் பெறுவதற்காக
ஆறுகள்
தினம் கடலைத்தேடுவதெல்லாம்
தாம் கலந்து கொள்வதற்காக
கவிஞர்கள்
உறவைத் தேடுவதெல்லாம்
தம் கலையுணர்வு நிலைப்பதற்காக
பேனா தாளைத் தேடுவதெல்லாம்
புள்ளடிகளைச் சேர்ப்பதற்காக
விருந்தினர்கள்
மாலையைத் தேடுவதெல்லாம்
தம் பெருமையை உணர்த்துவதற்காக
மானிடம்
மேடையைத் தேடுவதெல்லாம்
நல் வாக்கியம் பிறப்பதற்காக
துப்பாக்கிகள்
ரவையைத் தேவதெல்லாம்
தம் இலக்குகளை எட்டுவதற்காக
அதிகாலை கண்கள்
பு தேவதெல்லாம்
ரீங்காரத்திற்காக



நூல் : பொன்னாவரை -
சேனையூர் இந்திரா

# கப்பல்துறைக் காட்டினுள் கண்ணகி அம்மன் வழிபாடு



கடந்தவாரத் தொடர்ச்சி.. அவரால் அமைக்கப்பட்ட கண்ணகி அம்மன் ஆசனக்கல்லினை மையப்படுத்தி இந்த வழிபாட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இங்கிருக்கும் சிலையினை அண்மையில் சில விசமிகள் சேதப்படுத்தி விட்டதாக நண்பர் வருத்தத்துடன் கூறினார்.


காடாக இருந்த இந்த இடத்தினை தன்னார்வம் கொண்ட சில கப்பல்துறை இளைஞர்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் துப்பரவு செய்து சீர்படுத்தி இருக்கிறார்கள். பல தடைகள், அச்சுறுத்தல்கள் என்பனவற்றினைத் தாண்டி கடினமாக உழைத்திருக்கிறார்கள்.

வடகிழக்கைப் பொறுத்தவரை வழிபாட்டிடங்கள் சமய காரணங்களுக்கு அப்பால் அங்குவாழும் மக்களின் இருப்பினை உறுதிப்படுத்தும் ஆதாரங்களாகவும் அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கப்பல்துறை கண்ணகி அம்மன் தொடர்பில் தம்பலகாமத்தைச் சேர்ந்த திரு.பா.ஹம்சன் இயற்றிய சிலம்புத்தாய் என்ற 18 அம்மன் பாடல்கள் அடங்கிய நூல் 2011இல் வெளிவந்திருக்கிறது. சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் பெரியார் ஒருவரால் கப்பல்துறை கண்ணகி அம்மன்மீது பாடப்பட்ட அடைக்களப்பத்து பாடல்கள் இனக்கலவரத்தில் அழிந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

அழைத்தவுடன் செய்துகொண்டிருந்த வேலையை நிறுத்திவிட்டு உற்சாகத்துடன் உதவிய நண்பன் சதீஸ் இடம் மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து விடைபெற்றேன்.

புத்தகங்களிலும், இணையத்திலும் தமிழர் வரலாற்றாதாரங்களைத் தேடிக்கொண்டிருப்பவர்கள் மத்தியில் உயிர் வாழ்தலுக்காக அன்றாடம் கடினமாக உழைத்துக்கொண்டு, தங்கள் இருப்பையும், அடையாளப்படுத்தல்களையும் அழியவிடாமல் காக்கும் அந்த மக்களைப்பற்றிய எண்ணங்கள் மனதைக் கனக்கச்செய்தது.



முற்றும்.....



## அருள் தாருமம்மா

கவிதை என்பதே எழுத தெரியாமல், தெரியும் என ஆசிரியரிடம் கூறி அதனை உண்மையாக்க முறபட்டு எழுத முயற்சித்து 1996ம் ஆண்டு முதன்முதலாக எழுதிய 'புயலில் சிக்கிய நாங்கள்' என்ற கவிதையாகும். எனது ஆக்கங்கள் அவ்வப்பொழுது பத்திரிகை, சஞ்சிகைகளிலும் ஏனைய புத்தகங்களிலும் வெளிப்படுத்தியுள்ளேன்.

பக்தி பாடல்களை எழுதி எந்த வித ஆதரவுமின்றி மிகவும் கஷ்டப்பட்டு வெளியிடுகின்றேன். நெஞ்சில் சுமக்கும் வேதனையை தீர்திடு தாயே. உன்னை தொழுது உன்னிடமே சமர்ப்பிக்கிறேன்.

கப்பல்துறை கண்ணகை அம்மனுக்கு 60 வருடங்களுக்கு முன்னர் பெரியார் ஒருவரால் பாடப்பட்டிருந்த 'அடைக்களப்பத்து' பாடல் ஏடானது கலவரத்தினால் அழிந்து போய்விட்டதாக அறிந்தேன். அம்மனுக்காக பாடல் இயற்ற வேண்டும் என நினைத்து தற்பொழுது அம்மனின் திருவருள் கைகூடியுள்ளது.

ஓம் சக்தி

என்றும் தோழமையுடன்,

பா.ஹம்சன்
(பாலகிருஷ்ணன் ஹம்சபாலன்)

வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "ஆம்பள" விஷால் அதிரடி



சென்சார் போர்டு அனுமதித்த ஒரு திரைப்படைத்தை வெளியிட முடியாத நிலை சினிமாக்காரர்களுக்கு ஏற்படுகிறது என்றால் அதைவிட கொடுமை வேறு எதுவும் இல்லை என்று கொதித்தெழுந்த வி'ால், "கத்தி"க்கு பிரச்சனை ஏற்படுத்தினால், தனது பூஜை படமும் திரையிடப்பட மாட்டாது" என்று அதிரடியாக கூறியிருக்கின்றாராம்.

## குத்தாட்டத்தில் அழுகையா



குற்றாலம் பகுதியில் தற்போது நடந்து வரும் இந்த குத்தாட்ட படப்பிடிப்பில் பூர்ண நடிகை படுகவர்ச்சியான உடையில் குத்தாட்டம் ஆடிவருவதை வேடிக்கை பார்க்க அந்த பகுதியில் பொதுமக்கள் திரண்டுள்ளனர்.

இதில் படப்பிடிப்பை பார்க்க வந்த ஒருசிலர், பூர்ண நடிகையின் கவர்ச்சி உடையை பார்த்து மோசமாக ஒருசிலர் கமெண்ட் அடித்துள்ளனர். இதனால் அதிர்ச்சி அடைந்த நடிகை அழுதுகொண்டே படப்பிடிப்பில் இருந்து கிளம்பி ஓட்டலுக்கு சென்றுவிட்டதாக கூறப்படுகிறது.

## கத்தி திரையரங்க உரிமையாளர் மரணம்



பல பிரச்சனைக்கு பின்பு வெளியான கத்தி அரங்கம் நிறைந்த காட்சிகளாக உள்ளது. இப்படத்தை காண சென்ற ரசிகர்களுக்கு இடையே தள்ளு முள்ளு ஏற்பட்டதால் சென்னையைச் சேர்ந்த திரையரங்க உரிமையாளர் பரிதாபமாக மரணமடைந்தார். அத்துடன் கேரளாவைச் சேர்ந்த ரசிகர் ஒருவரும் பால்அபிஷேகம் செய்ய கட் அவுட் மீது ஏறி கீழே விழுந்து மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆற்றுக்குளியல் எப்படி இருந்ததோ!



ஆசிஷ் வித்யார்த்தி நடித்து வரும் டயரி படப்பிடிப்பு சிவ்நாத் ஆற்று பகுதியில் நடந்து வருகிறது. ஆற்றில் இறங்கி பூஜை செய்து விட்டு குளிப்பது போன்ற காட்சியை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் ஆசிஷ் தண்ணீரில் மூழ்கி தத்தளித்தார். படப்பிடிப்பை வேடிக்கை பார்த்தவர்கள் படத்தின் காட்சி என்று கருதிக் கொண்டு வேடிக்கை பார்த்தார்கள். இயக்குனர் கிருஷ்ணா ராவ் இது காட்சி இல்லை. நிஜமாகவே அவர் ஆற்றில் முழ்குகிறார் என்று கத்திய உடனே அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீஸ்காரர் ஆற்றில் குதித்து ஆசிஷை காப்பாற்றியுள்ளார்.

## குழந்தை குட்டி வேணும் - கோடி நோ



கோடி கோடியாய் சம்பாதிக்க வேண்டும் என்றுதான் நடிகைகளும், அவர்களின் அம்மாக்களும் திட்டமிடுவார்கள்.ஆனால் நடிகை சமந்தாவோ, சீக்கிரம் திருமணம் கொண்டு குழந்தைகள், குடும்பம் என்று செட்டில் ஆகவேண்டும் என்று திட்டமிட்டுள்ளதாக கூறியுள்ளார்.

## இவகள யாரால முந்த முடியும்



தன் கவர்ச்சி நடிப்பால் அனைவரையும் கலங்கடித்தவர் சன்னி லியோன். இவர் படங்களில் நடிப்பதை விட பெரும்பாலும் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போடுவதையே விரும்புகிறார்.

இந்நிலையில் வருத்தப்படாத வாலிபர் சங்கம் படத்தின் தெலுங்கு ரீமேக்கான கரன்ட் டீகா படத்தில் ஒரு சில காட்சிகள் நடிக்க ஷரூ. 75 லட்சம் சம்பளமாக பெற்றுள்ளார். இதை அறிந்த பல தென்னிந்திய ஹீரோயின்கள் 'நாம் நடிக்கும் முழுப்படத்தின் சம்பளமே இவ்வளவு தானே' என்று அதிர்ச்சியில் ஆழ்ந்தார்களாம்.

## விட்டதைப் பிடிப்பேன்



அஞ்சான் படத்தின் தோல்வி சூர்யாவை மிகவும் பாதித்துள்ளது. இதனால் தன் அடுத்த படத்தில் விட்டது அனைத்தையும் பிடிக்க வேண்டும் என்று இருக்கிறார்.

தற்போது இவர் வெங்கட் பிரபு இயக்கத்தில் மாஸ் படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு பெல்ஜிரியாவில் நடந்து வருகிறது. இந்நிலையில் படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் டீசர் நாளை வெளிவரும் என கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றது.

## "தல" உதாரு!!??



தல வின் புதிய படத்தின் ஒரு பாடலில் யாரு ..... உதாரு என்னும் வரி உள்ளதாம். இதற்கு காரணம் அஜித் யாழ்ப்பாணத் தமிழில் கதைக்கும் ஒரு கரெக்டர் ஆகவும் வருகிறாராம்.

## சக்கை போடு போடும் பூஜை

விஷால், ஸ்ருதிஹாசன் நடிப்பில் ஹரி இயக்கத்தில் பூஜை படம் உலகம் முழுவதும் 1100 திரையரங்குகளில் ரிலிஸ் ஆக இருந்தது. தற்போது இன்னும் 100 திரையரங்குகள் அதிகமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

### யாரு செல்லம் நீ!!



சென்ற வாரம் குஷ்பு

# சினிமுரசு

இயக்குனர் ஏ.ஆர்.முருகதாஸின்

## திரை விமர்சனம்

## கத்தி

விஜய், சமந்தா நடிக்கும்



விஜய்க்கும், பஞ்சாயத்துக்கும் இருக்கும் பிணைப்பு போலவே, விஜய்க்கும் ப்ளப்பிற்கும் இருக்கும் பிணைப்பும் ரொம்ப ஸ்ட்ராங்காகவே இருக்கிறது. படத்தின் கதை நன்றாக புரிந்தாலும், உலகமே உற்சாகமாக கொண்டாடிய சுறா படத்தை ஏன் மறுபடியும் முருகதாஸ் எடுத்தார் என்பதுதான் புரியவில்லை. இடைவேளையின் போது கூட "உயிர் மேல ஆசை இருந்தா ஓடி போய்டு"ன்னு விஜய் சொன்னார். நாம்தான் கேட்கவில்லை.

கொல்கத்தா சிறையிலிருந்து மொக்கையாக போலீஸை ஏமாற்றி தப்பிக்கும் கதிரேசன் விஜய், சென்னைக்கு வருகிறார். சென்னையில் இருந்தபடி பாங்காக் செல்ல முயற்சி செய்யும் கதிரேசன் தன்னை போல் உருவம் கொண்ட இன்னொரு விஜய் ஜீவானந்தம் சிலரால் சுடப்பட்டு மருத்துவமனையில் இருப்பதை கண்டு, ஜீவானந்தமாக ஆள்மாறாட்டம் செய்கிறார். ஆனால் அந்த ஜீவானந்தம் தனது தன்னூத்து கிராமத்தின் வறட்சியை காரணமாக வைத்து ஒரு வெளிநாட்டு கார்ப்ரேட் கம்பெனி ஆட்டையை போடுவதை தடுத்து ஊரையும், மக்களையும் காப்பாற்ற போராடும் ஒரு குட்டி கூடாங்குளம் உதயகுமார் போன்ற "தலைவன்!" என தெரிந்து கதிரேசன் ஜீவானந்தமாக மாறி அந்த ஊரையும் ஊர் மக்களையும் எப்படி காப்பாற்றினார் என்பதே கதை. தம்பி அனிருத் நல்லா பப்ளிஸிட்டி மட்டும் பண்ணுறீங்க, கொஞ்சம் முயற்சி செய்து நல்ல இசையை குடுத்திருக்கலாம். காமெடிக்கு சதீஷ், வில்லனாக நீல் நிதின் முகேஷ். ரெண்டு பேரும் பண்ணும் காமெடி ரொம்ப ரொம்ப சூப்பர்.



"ஒரு தடவை முடிவு பண்ணிட்டா, தன்னோட பேச்சை தானே கேட்பதில்லை" என்பதில் விஜய் மிக பிடிவாதமாக இருப்பது தலைவா வந்ததிலிருந்து நன்றாகவே தெரிகிறது. லைக்காவை வைத்து இன்னும் சில படங்கள் இயக்கினால் கோடீஸ்வர தமிழ் விரோதி ஒருவரை ஏழையாக்கிய புண்ணியம் வந்து சேரட்டும்.

கத்தி - சமூக வலைதளங்களுக்கு ஒரு செம வேட்டை காத்திருக்கு!

## சினிமா கிசு கிசு



- "காஞ்சனா" மற்றும் "அரண்மனை" போன்ற திகில் படங்களில், ராய் லட்சுமி நடித்திருந்தார். ஆனால் பேயாக நடிக்கவில்லை. பேய்க்கு பயப்படும் வேடத்தில் தான் நடித்திருந்தார். தற்போது ஒரு படத்தில், பேய் வேடத்திலேயே நடிக்க கமிட்டாகி உள்ளார் ராய் லட்சுமி.
- அப்படி என்ன மாயம் செய்தாரோ தெரியவில்லை, நயன்தாராவுக்கு தமிழ், தெலுங்கு இரண்டிலுமே இளம் நடிகர்களிடமிருந்து வாய்ப்புகள் வந்தவண்ணமுள்ளதாம்.
- துல்கர் சல்மானுடன், இரண்டு மலையாள படங்களில் நடித்துள்ளேன். அவருக்கும், எனக்குமிடையிலான கெமிஸ்ட்ரி நன்றாக ஒர்க் அவுட்டாகியிருந்தது. அதனால், காதலை மையமாக கொண்ட இந்த படத்திலும், தமிழகமே கொண்டாடும் வகையில், எங்களது கெமிஸ்ட்ரி வெளிப்படும்.
- தனது பிரியாணி வித்தையை தற்போது புறம்போக்கு படத்தில் நடித்து வரும் கார்த்திகா விடம் காட்டியுள்ளார் ஆர்ய. அந்த பிரியாணி வாசத்திலே மயங்கி விட்டாராம் கார்த்திகா.
- சின்னத்திரையில் அழகழகான கோலங்கள் போட்ட நடிகைக்கு இப்போதும் சீரியல் வாய்ப்புகள் நிறைய வருகிறது. ஆனால் நடிகை தான் உச்சத்தில் இருந்தபோது வாங்கிய சம்பளத்தில் இருந்து இறங்கி வராததால் எல்லாரும் விலகி ஓடுகிறார்களாம்.
- பிரபல இயக்குனர் கத்தி படத்தில் இடம்பெற்றுள்ள பக்கம் வந்து கொஞ்சம் முத்தங்கள் தா பாடலை தினமும் கேட்டுக்கொண்டிருப்பதாக டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.
- புதுமை இயக்குனர் அடுத்து காமெடி புயலுடன் இணைந்து ஒரு படம் பண்ண விரும்பினார். இதற்காக தனது உதவியாளர் மூலம் காமெடியை அணுகினாராம். "நான் இப்போ ஹீரோவாத்தான் நடிக்கிறேன். அப்படி நான்தான் நடிக்கணும்னா இவ்ளோ சம்பளம்" என்று ஒரு தொகை சொல்லி அனுப்பினாராம்.
- லிங்காவில் படம் முழுக்க ரஜினியுடன் வருவது போல் திரைக்கதை அமைக்கப்பட்டு உள்ளதால் ஏக குஷியில் உள்ளார் சந்தானம், அதுமட்டுமில்லாமல் ஷூட் இல்லாத நேரத்தில் கூட ரஜினியின் தனியறைக்குச் சென்று அவரை சந்தோஷப் படுத்தி வருகிறாராம் நம்ம சந்தானம் .
- பிசியான படப்பிடிப்பு இல்லை என்பதால், "டிவி" பார்த்துக் கொண்டே நொறுக்குத் தீனி சாப்பிடுவதே, அவரின் பொழுதுபோக்காகி விட்டதாம். விளைவு, அவரது கட்டுப்பாட்டையும் மீறி, உடல்கட்டு ஒரு சுற்று பெருத்து விட்டதோடு, அவரது பற்களும் நிறம் மாறி விட்டதாம்.
- சூர்யா ரொம்ப அனுபவசாலி நடிகர். கூர்ந்து கவனிப்பார். கார்த்தி ரொம்ப எனர்ஜி. துறுதுறு. அவர் பருத்திவீரன் படம் பார்த்து அசந்து போயிட்டேன் என்கிறார் தமன்னா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## Glaxy tab 4 இன் புதிய படைப்பு

சம்சுங் நிறுவனம் அண்மையில் Galaxy Tab 4 எனும் 7 அங்குல தொடுதிரையினைக் கொண்ட டேப்லட்டினை அறிமுகம் செய்திருந்தது. இந்நிலையில் தற்போது Galaxy Tab 4 ழேழம எனும் 10.1 அங்குல அளவுடைய திரையினைக் கொண்ட புதிய டேப்லட்டினை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இதன் திரை 1280 x 800 Pixel Resolution உடையதாகக் காணப்படுகின்றது.

பொழுதுபோக்கு மற்றும் வாசிப்பு தொடர்பான தேவைகளுக்கு அதிகளவில் பயன்படுத்தக்கூடிய இந்த டேப்லட் ஆனது 299.99 டொலர்கள் பெறுமதி உடையது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆப்ஸ் ஸ்டோரின் சாதனை



அப்பிள் நிறுவனம் தனது மொபைல் சாதனங்களுக்கான மென்பொருட்களை தரவிறக்கம் செய்யும் வசதியினை அப்பிள் ஆப்ஸ் ஸ்டோரின் ஊடாக பயனர்களுக்கு வழங்கி வருகின்றது. இந்நிலையில் தற்போது இந்த தளத்தினூடாக 85 பில்லியன் தரவிறக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட தரவிறக்கத்தை விட இந்த வருடம் 25 பில்லியன் தடைவைகள் அதிகமாக இந்த வருடம் தரவிறக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தரவிறக்க வசதி Download

வீடியோ எடிட்டிங் செய்வதற்கு தேவையான சிறந்த Subtitle களை தரவிறக்கம் செய்வதற்கு OpenSubdownloader எனும் மென்பொருள் பயனுள்ளதாக காணப்படுகின்றது. இதன் மூலம் இணையத்தளங்களில் தேடுதல்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாது காணப்படுவதுடன், English, French, Spanish, Portuguese, Chinese, Indonesian, Arabic போன்ற 50 இற்கும் மேற்பட்ட மொழிகளில் Subtitle -களை தரவிறக்கம் செய்யும் வசதி காணப்படுகின்றது.

மேலும் 14MB கோப்பு அளவுடைய இம்மென்பொருளின் மூலம் DIVX, MPEG, AVI போன்ற கோப்பு வகைகளில் Subtitle களை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

## புதிய ரக சம்சுங்



சம்சுங் நிறுவனமானது Intel நிறுவனத்தின் Bay Trail எனும் நவீன Processor-னைக் கொண்ட Chromebook 2 இனை அறிமுகம் செய்துள்ளது. 249 டொலர்கள் பெறுமதியான இச்சாதனமானது 11.4" x 8.6" x 0.66" என்ற அளவிடையையும், 2.65 பவுண்ட் எடையையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

## செவ்வாயில் குடியேற பயிற்சி



செவ்வாய் குறித்த ஆராய்ச்சிக்காக நாசா பல்வேறு செட்டிலைட்டுக்களை அனுப்பி அதன்மூலம் கிடைக்கும் தகவல்களை சேகரித்து ஆராய்ச்சி செய்து வருகிறது. இந்நிலையில் ஒருசில நாடுகள் தற்போது செவ்வாய் கிரகத்திற்கு மனிதர்களை அனுப்பி அங்கு வாழவைக்க இப்போதே பயிற்சி கொடுத்து வருகிறது.

அமெரிக்காவின் நாசாவும் வரும் 2030ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது. ஆனால் நேற்று அமெரிக்க தனியார் ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று வெளியிட்ட ஆராய்ச்சி முடிவு ஒன்றின் அறிக்கையில், செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் அதிகபட்சமாக 68 நாட்களுக்கு மேல் உயிர் வாழ முடியாது என்று கூறியுள்ளது. இதனால் செவ்வாய் ஆராய்ச்சியாளர்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்,.

# விளையாட்டுப் பையன்

## மாட்டிவீங்கடா



இணையதளத்தில் மற்றவர்களுக்கு எதிராக அச்சுறுத்துகின்ற விதமான மற்றும் துஷ்பிரயோகமான விடயங்களை வெளியிடும் நபர்களுக்குக் கடுமையான தண்டனைகளை அளிப்பது தொடர்பில் பிரிட்ஷ் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. இணையத்தில் ஒருவரை ஒருவர் மோசமாகத் திட்டுவது போன்ற துஷ்பிரயோகங்கள் அதிகம். இப்போதுள்ள பரிந்துரைகள் சட்டமாக்கப்பட்டால், இப்படியான நபர்களை இரண்டு ஆண்டுகள் வரை சிறையில் அடைக்க முடியும். இந்தக் குற்றத்துக்காக இப்போது அதிகபட்சமாக 6 மாதங்களே தண்டனை அளிக்கப்படுகின்றது. பிரபல இணைய துஷ்பிரயோக சம்பவங்கள் பலவற்றின் தொடர்ச்சியாக அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.



## விநியோகத்தில் ஈடுபடும் றோபோ

பொருட்களை சுமந்து சென்று விநியோகம் செய்யும் ரோபோவை துபாய் ஜிடெக்ஸ் கண்காட்சியில் பனசோனிக் நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. மருத்துவமனைகளில் ஆட்கள் பற்றாகுறையாக உள்ள இடங்களில் பயன்படுத்தும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு பொருட்களை எடுத்து செல்லும் வகையில் இந்த புதிய ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது. மனிதர்களை அடையாளம் கண்டு மோதாமல் ஒதுங்கி செல்லும் வகையிலும் அல்லது அங்கேயே நின்று மீண்டும் செல்லும் வகையிலும் இன்னும் பல்வேறு வசதிகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பார்வையை மீட்டுத்தரும் செல்கள்



பார்வையை இழந்தவர்களுக்கு கருமுட்டையிலுள்ள ஸ்டெம் செல்களை பயன்படுத்தி மீண்டும் பார்வையை ஏற்படுத்த முடியும் என அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். எனினும் வயதின் மூப்பு அடிப்படையில் கண்பார்வையை இழக்கும் நோயாளிகளுக்கு மட்டுமே இந்த முறை வெற்றியளிக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறான பார்வைக் குறைபாடு உடைய 18 பேரை வைத்து மேற்கொண்ட ஆய்வின் மூலம் இந்த முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது.

இவர்களுக்கு மனித கருமுட்டையிலுள்ள ஸ்டெம்ஸ் செல்களை மாற்றீடு செய்ததன் மூலம் படிப்படியாக பார்வையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக விஞ்ஞானிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## நீங்கள் பாதுகாப்பாக உள்ளீர்களா!



சமூகவலைத்தளமான பேஸ்புக் ஆனது Facebook Safety Check எனும் புதிய வசதியினை அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது. இதன் மூலம் பேஸ்புக்கில் இணைந்திருக்கும் நண்பர்கள், உறவினர்களில் இடங்களில் அனர்த்தங்கள் ஏற்படும்போது அவர்கள் பாதுகாப்பாக உள்ளனரா என அறிந்தகொள்ளும் வசதியை தருகின்றது.

# நடுவீதியில் எரி(றி)ந்த சிவப்பு விளக்கு

மனிதாபிமான போர்" என அரசாங்கத்தால் சொல்லப்பட்ட "மனிதாபிமான நடவடிக்கை" 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதியுடன் நிறைவடைந்ததன் பின்னர், நாட்டில் இடம்பெறுகின்ற சம்பவங்களை பார்க்கையில் "மனிதாபிமானம்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் தேடவேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டு திருமணம் முடித்து கொண்ட "பட்டி" என்று ஊரவர்களால் அறியப்பட்ட வீரசிங்கம் ஆராச்சிகே காந்தி லதா, இரண்டு குழந்தைகளின் தாயாவார். கணவன் விட்டுச்சென்றுள்ள நிலையில் அவர், தன் இரண்டு குழந்தைகள் மற்றும் வயதான தாயுடன் இரத்தினபுரி கஹாதொல எனுமிடத்தில் வசித்து வருகின்றார்.தான் ஒரு விலைமாது என்றும் வீட்டு கஷ்டத்தினால் குடும்பத்தை கொண்டு நடத்துவதற்காகவும் விரும்பியோ, விரும்பாமலோ இத்தொழிலை தேர்ந்தெடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அந்த பெண், தன் சட்டத்தரணியினூடாக பொலிஸ் மா அதிபரிடம் கையளித்துள்ள முறைப்பாடு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செய்துள்ள முறைப்பாட்டின் பிரகாரம் இரத்தினபுரி பெண் மீதான தாக்குதல் சம்பவம் செப்டெம்பர் 14ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

விலைமாதான தன்னை, தாக்கியதாக கூறப்படும் பொலிஸ் சார்ஜன்ட் அடிக்கொருதடவை தன்னை அழைப்பதாகவும் வயிற்றுப் பிழைப்புக்காக இத்தொழிலை செய்கின்ற நான், பணமின்றி வரமாட்டேன் என்று தெரிவித்துவிட்டதாகும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். பின்னர் ஒருநாள் அதே சார்ஜன்ட் 500ரூபாய் பணம் கேட்டதாகவும் அதனை கொடுக்க மறுத்ததையடுத்தே, தன்மீது வைராக்கியம் கொண்டு, என்றோ ஒருநாள் பார்த்துக்கொள்வேன் என்று அவர் சவால்விடுத்ததாகவும் அம்முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று கங்கா என்ற மற்றொரு பெண்ணை ஏவிவிட்டு தன்னுடன் சண்டையிட வைத்ததாகவும் அதன்பின்னரே, பொலிஸ் சார்ஜன்ட் தன்மீது தாக்குதல் நடத்தியதாகவும் அந்தபெண் தன் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தபோதிலும் அம்முறைப்பாட்டை பதிவு செய்துகொள்வதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தபோதிலும் அம்முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டவில்லை.

தன்னை ஒரு ஹோட்டல் அறைக்கு அழைத்து சென்ற பொலிஸார் இந்த பிரச்சினை இத்தோடு விட்டுவிடும் படி, 3,000 ரூபாய் பணத்துடன், இரண்டு ஹெரோயின் பக்கற்றுகளையும் கொடுத்ததாகவும் அவற்றை வாங்காமல் அங்கியிருந்து தப்பிவந்து விட்டதாகவும் அப்பெண் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

சார்ஜன்டினால் அப்பெண் தாக்கப்படும் போது, பஸ் தரிப்பிடத்திலிருந்தவர்களில் ஒருவர், தனது அலைபேசியில் அச்சம்பவத்தை பதிவு செய்து இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யாமல் இருந்திருந்தால், அச்சம்பவம் பெரும் விவகாரமாக மாறியிருக்காது.

முறைப்பாடு செய்வதற்கு முன்னர், அந்த பெண் முறைப்பாடு செய்யவில்லை என்று மழுப்பிய பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், காக்கி சீருடை அணிந்திருந்தமையினால் அவரை பொலிஸார் என்று கூறமுடியாது என்றார். எனினும், பெண்ணின் முறைப்பாட்டை தொடர்ந்து தாக்குதல்



நடத்தியது சார்ஜன்ட் என்று இனங்காணப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரே அறிவித்திருந்தார்.

இந்நிலையில், தன் மீதான தாக்குதலுக்கு எதிராக 50 மில்லியன் ரூபாவை நட்டஈடாக கோரி, உயர் நீதிமன்றத்தில் ஒக்டோபர் 3ஆம் திகதி மான நஷ்ட வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளார்.

அந்தப்பெண் விபசாரி என்று தெரிந்திருந்தால், தனது அலைபேசியில் குறித்த நபர் அச்சம்பவத்தை பதிவு செய்திருக்கவும் மாட்டார், இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்திருக்கவும் மாட்டார். அப்பெண், பாலியல் தொழிலாளி என்பதற்கு அப்பால் ஒரு பெண் என்ற மனிதாபிமானதுடன் பார்க்கவேண்டும் என்பது, அவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பிலான வீடியோ வெளியானதன் பின்னரே சகலருக்கும் புலனானது.

எவ்வாறாயினும் குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று 1994இன் சித்திரவதைக்கு எதிரான சமவாயம் இல22 (CAT) சட்டத்தின் கீழ் வருகின்றது. இந்த சட்டத்தின் பிரகாரம் சித்திரவதையில் ஈடுபட்ட எந்தவொரு அரசாங்க ஊழியருக்கும் 7வருட கடூழிய சிறை அல்லது 10 ஆயிரம் ரூபாய் அல்லது இரண்டு விதத்திலும் தண்டிக்கப்படலாம்.

இரத்தினபுரி விவகாரத்துடன் தொடர்புடைய அந்த பொலிஸ் சார்ஜன்டுக்கு எவ்வாறான தண்டனை கிடைக்கும் என்பதெல்லாம் நீதிதேவதையின் முன்னால் விடப்படுகின்ற வினாவாகும்!

**கவிதா சுப்ரமணியம்**

நன்றி – தமிழ் மிரர் (www.tamilmirror.lk)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிக்கன கொள்வனவும் கொள்ளையும்

வாழ்வியல் -24

ப ண ம்



(வி.என்.சந்திரகாந்தி)

சம்பாதிப்பதால் மாத்திரம் ஒருவன் பணக்காரனாகி விட முடியாது. சம்பாதித்த பணத்தை பத்திரம் பண்ண தெரிந்தால் மாத்திரமே அது சாத்தியமாகுமென்பதை நாம் ஒவ்வொருவரும் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும். ஒழுக்கமற்றவர்கள் குடியிலும், கூத்தியிலும் செலவு செய்து விடுகிறார்கள். பொறுப்பற்றவர்கள் அநாவசியமான முறையில் பணத்தை வாரியிறைக்கிறார்கள். ஒழுக்க சீலரான மக்கள் தமக்கு மிக மிக அவசியமான பொருட்களை மாத்திரம் சிக்கனமான முறையில் கொள்வனவு செய்வதன் மூலம் எஞ்சிய பணத்தை சேமித்துக் கொள்கிறார்கள்.

சந்தைக்கு போனால் முதலில் எங்கெங்கு நல்ல தரமான பொருட்கள் இருக்கின்றன என்று பார்க்க வேண்டும். பின்னர் குறைந்த விலையை செலுத்தி தரமான பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும். புடவைக்கடையில் ஆடைகளுக்கு உண்மையான விலையின் இரட்டிப்பு விலையை குறித்திருப்பார்கள். நீங்கள் பேரம் பேசுபவராக இருந்தால் படிப்படியாக இறங்கி வருவார்கள். அப்போதும் உங்களுக்கு விலையில் நம்பிக்கை இல்லாவிட்டால் பிறிதொரு கடையில் பார்த்து விட்டு வருவதாக கூறிப்பாருங்கள், அப்போ இன்னும் இறங்கி வருவார்கள்.

அழகு சாதனப்பொருட்கள், மின் உபகரணங்கள் விற்கும் கடைகளில் உங்களை கவர்ந்து விடக்கூடிய நிறைய பொருட்கள் இருக்கும். ஒரு பொருளில் உங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினால் போதும் வியாபாரி தனது விலையிலிருந்து இறங்கவே மாட்டார்! எனவே நீங்களோ உங்களுடன் வருபவர் எவராயினுமோ சிறு பிள்ளைகளோ விலை பேசி முடிக்கும் வரை ஒரு பொருள்மேல் விருப்பை காட்டக்கூடாது.

உங்கள் பணத்தை விழுங்கி ஏப்பம் விடக்கூடியவை தங்க ஆபரணக்கடைகளே! சிங்கப்பூர் ஆபரணங்களில் உங்களுக்கு இருக்கக்கூடிய அபரிமிதமான ஆசையை புரிந்து கொண்டு அதற்கும் சேர்த்து பணம் கறந்து விடுவார்கள் என்பதில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உங்கள் நகையொன்றை அவசர தேவைக்காக நீங்கள் விற்கச் சென்றால் அதற்கு பழைய பவுண் என்று கூறி பெரும் விலைக்கழிவு ஒன்றை போடுவார்கள். அதே பவுணை நீங்கள் கொடுத்து அதன் நிறைக்கு ஒப்பான ஒரு நகைக்கு 'ஓடர்' கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். முதலில் உங்கள் பவுணை பழைய பவுண் விலை போட்டு வாங்கி நீங்கள் பெற உள்ள நகைக்கு புதிய விலைபோட்டு செய்தாரம் செய்கூலி எல்லாம் நிர்ணயித்து சில சமயம் 'காரட்' குறைவான நகையையும் உங்கள் மேல் கட்டி அடித்து விடுவார்கள். இவ்விதமான நகைக்கொள்வனவை நீங்கள் தவிர்க்க வேண்டும். கிராமங்களில் தமது வீட்டிலேயே பட்டறை வைத்து நகை தொழில் செய்யும் பத்தர்மார் உங்கள் பவுணின் எடைக்கும் காரட்டுக்கும் இணையான நகையை செய்தாரம், செய்கூலி மட்டும் பெற்று செய்து தருவார்கள்!

கொள்வனவு விடயத்தில் அரச திணைக்களங்கள் விலை நிர்ணயம் கோரல் (Calling quotation) முறை ஒன்றை பின்பற்றுகின்றன. மூன்றுக்கு மேற்பட்ட விநியோகஸ்தர்களுக்கு தமக்கு தேவையான பொருட்கள் தரம், அளவு ஆகியவற்றை குறிப்பிட்டு விலை நிர்ணயத்தை கோருவது. பின், Tender Board ஒன்றை நியமித்து குறைவான விலையை தரமுடன் விநியோகிக்கும் முகவருக்கு கொள்வனவு கட்டளையை வழங்குவது. இந்த முறை அரசின் மிக உயர் மட்டத்தாலும் பின்பற்றப்படுகின்றது. பொருட்களை கொள்வனவு செய்வது மட்டுமன்றி சேவைகளை பெறுவதிலும் ஒப்பந்தக்காரரை தெரிவு செய்வதிலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது.

அரச திணைக்களங்களில் பண்டகசாலைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் தமக்கு சலுகை செய்யக்கூடிய ஒரு விநியோகஸ்தரை தெரிவு செய்து வைத்திருப்பர். குறிப்பிட்ட விநியோகஸ்தரே வெவ்வேறு கடித தலைப்புக்களில் மூன்று விலைப்பட்டியலை வழங்குவர். இறுதியில் கொள்வனவு கட்டளை அவரையே சென்றடையும். இங்கு சேவைகளும் இவ்வாறே பெறப்படுவதால் தரமற்ற கட்டடங்கள் இடிந்து விழுவதும் உயிராபத்து நிகழ்வதும் சாதாரணமாக உள்ளது. இந்த கொள்ளையை தவிர்ப்பதற்கு மேலதிகாரிகளும் கணக்காய்வாளர்களும் நியமிக்கப பட்டிருந்தும் இன்றுவரை எந் நடவடிக்கையும் கை கொடுக்கவில்லை!

சிலருக்கு வியாபார நிமித்தமான கொள்வனவுகளை செய்யவேண்டி ஏற்படுவதுண்டு. ஒரு உற்பத்தி பொருளை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து கூடிய விலைக்கு விற்றல். இப்படியான சந்தர்ப்பத்தில் ஒரு உற்பத்தி பொருள் எந்த 'சீசனில்' (season) எங்கு விளைச்சலை கொடுக்கின்றது என்பதை தெரிந்து கொண்டு கொள்வனவை மேற்கொண்டு அதை பாதுகாத்து விலை ஏறும் காலத்தில் விற்றல் வேண்டும்.

ஒரு வீடு, காணி ஆகியவற்றை கொள்வனவு செய்யும் போது அவை அமைந்துள்ள பிரதேசம், சனப்பரம்பல் மற்றும் அண்மித்த இடங்களில் பாடசாலை, வைத்தியசாலை, பஸ்நிலையம், புகையிரத நிலையம், கோவில் ஆகியவற்றின் அமைவை அவதானிக்க வேண்டும்.

பொருட்கள் கொள்வனவு நிமித்தம் வங்கிகள், கடனட்டை (Credit Card) வசதியை வழங்கியுள்ளன. அட்டையை வருடாந்தம் புதுப்பித்தல் மற்றும் முத்திரைக்கட்டணம் வேறு உங்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. பணத்தை செலுத்த தவறினால் வட்டி அறவீடு!

நீங்கள் அதிக அளவு பண பலத்துடன் இருந்து மேலும் கொள்வனவுகளை செய்ய முன்வந்தால் இருக்கவே இருக்கின்றது பங்குச்சந்தை. உங்கள் பணத்தை புத்திசாதுர்யமாக இலாபமீட்டும் கம்பனிகளில் முதலீடு செய்தால், அதிர்ஷ்டமும் கைகொடுத்தால் நீங்கள் பெரும் புள்ளி ஆகிவிடலாம்!

எமது கிராமத்தில் மிகக்கெடுபிடியான எனது உறவினர் ஒருவர் கொள்வனவு செய்வதில் பெரும் கில்லாடி என பெயர்பெற்றிருந்தார். தனது பேரம் பேசும் வல்லமையால் தனது வீட்டிற்கு வடக்கே உள்ள காணியை குறைந்த விலை கொடுத்து கொள்வனவு செய்து கொண்டார். மேற்கே சொரியல் காணி ஒன்றை அடாத்தாக தடுத்து வைத்துக்கொண்டார். ஒரு பக்கம் காளி கோயில். குடி இல்லை. தெற்கே பிள்ளைகள் அனைவரையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு இன்றோ நாளையோ என இருந்த தம்பதியினரின் நல்ல விலைபோகக்கூடிய வீட்டை தடுத்து குறைந்த விலைக்கு கொள்வனவு செய்து கொண்டார். இப்போ யாரும் அயல் இல்லை. ஒரு நாள் ஆயுத தாரிகள் இரவில் அவரது வீட்டில் புகுந்தார்கள். குடும்பமாக அவலக்குரலிட்டும் அதனைக்கேட்டு ஓடி வர அயல் என்று எவரும் இல்லை. பல பொருட்கள் இலகுவாக அபகரிக்கப்பட்டன. மறுநாளே குறைந்த விலையில் தனது காணிகளை யாராவது வாங்க முன்வருவார்களா என விசாரிக்க தொடங்கிவிட்டார்.

# தேசிய SMS செய்திகள்

- **ஊழல் குற்றச்சாட்டு**

2004ஆம் ஆண்டு முதல் இற்றை வரையிலான காலப்பகுதி வரையில் நகர சபை, பிரதேச சபை, மாகாண சபை ஆகிய நிறுவனங்களை சேர்ந்த 104 உறுப்பினர்கள் மீது ஊழல் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்புபட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டவர்களாக உள்ளனர் எனத்தெரிவித்த உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு மேற்படி நபர்களில் 57 பேர் சட்டத்தின் முன்னிலையில் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டிருப்பதாகவும் பாராளுமன்றத்தில் தகவல் வெளியிட்டது.

- **சிறுவனை கடத்தினாரா பிக்கு**

குறித்த சிறுவன் தாய், பாட்டி மற்றும் பிக்கு ஒருவருடன் சைக்கிள் வாங்க ஹோரண நகருக்குச் சென்றுள்ளார். இதன்போது தாய் மற்றும் பாட்டி வங்கிக்குச் சென்றவேளை சிறுவனுடன் பிக்குவும் காணாமல் போயுள்ளார். பின் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் படி இன்று காலை சிறுவன் மீட்கப்பட்டுள்ளார். மேலும் குறித்த பிக்கு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

- **த.தே.கூ. வின் பலத்த எதிர்ப்புக்கு பின் பிரேரணை நிறைவேற்றம்**

கல்முனை கரையோர மாவட்டக் கோரிக்கையை வலியுறுத்தி கல்முனை மாநகர சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் மூன்று மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

- **சாதாரண தர பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும்**

2014ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்டபடி மாற்றங்கள் எதுவுமின்றி டிசம்பர் 09ம் திகதி முதல் 18ம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இது குறித்த நேர அட்டவணை பரீட்சைகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

- **ஜனாதிபதி தேர்தல் ஜனாதிபதிக்கே அவசியம்**

வட, கிழக்கு தமிழ் மக்களுடைய எதிர்பார்ப்பு ஜனாதிபதித் தேர்தல் அல்ல. எமது மக்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகள், மீள்குடியேற்றப் பிரச்சினைகள், அரசியல் உரிமைப் பிரச்சினைகள் என பலதரப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தல் ஜனாதிபதிக்கே அவசியம். தமிழ் மக்களுக்கு இல்லை என்கிறார் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் ஊடகப் பேச்சாளருமான எம். ஏ.சுமந்திரன்

- **2015 வரவு செலவுத் திட்டம்**

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் 24.10.2014 பகல் 1.30 மணியளவில் வரவு செலவுத்திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அந்தவகையில் இன்றைய வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கு 2500 ரூபா வரையிலான அளவில் சம்பள உயர்வு கிடைக்கும் என்று தகவல்கள் தெரிவித்தன.

- **அதிஷ்ட இலாபச் சீட்டில் இருந்த அதிஷ்டம் வாழ்க்கையில் இருக்கவில்லை போலும்**

கல்கமுவ - வெடகுலுவாகம பிரதேசத்தில், இரண்டரைக் கோடி ரூபாவை அதி'டலாபச் சீட்டின் மூலம் வெற்றி கொண்ட 38 வயதான ஒருவர் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

- **அவசர ஜனாதிபதித் தேர்தல் வேண்டாம்**

அரசியலமைப்பிற்கு எதிராக அவசர ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டாம் என வலியுறுத்தி தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கடிதமொன்று அனுப்பி வைத்துள்ளார்.

- **ஆசிரியர்களுக்கு சம்பளத் தடை**

ஊவா மாகாண சபைத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி வேட்பாளர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏழு ஆசிரியர்களுக்கு ஏற்கனவே ஆசிரியர்களாக கடமையாற்றிய முதல் மாத சம்பளம் நிறுத்தப்பட்டமையை ஆட்சேபித்து மனித உரிமை ஆணைக்குழுவிடம் புகார் செய்யப்பட்டிருக்கின்றது.

- **துப்பாக்கி காட்டி கொள்ளை**

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சுமார் ஆறு இலட்சம் ரூபா இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

- **பாரம்பரிய பயிரிடல்**

அதிக நீர்ப்பாசனம் தேவைப்படும் கலப்பினங்களை மாத்திரம் முற்றுமுழுதாக நம்பியிராமல் வரட்சிக்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய பாரம்பரியப் பயிரினங்களுக்கு நாம் மீளவும் திரும்பவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று வடமாகாண விவசாய, கமநலசேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

- **பிச்சையெடுக்கும் பிள்ளைகள் குறித்து விசாரணை**

பிச்சையெடுக்கப் பயன்படுத்தப்படும் குழந்தைகளின் உண்மையான பெற்றோர் தொடர்பில் விசாரணை நடத்தும் வேலைத்திட்டமொன்றை, பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# நிகழ்வுகள்

## சிறுவர் தின விழிப்புணர்வு கருத்தரங்கு

திருக்கோணமலை – பட்டினமும், சூழலும் பிரதேச பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட இச் சிறுவர் தின ஞாபகார்த்த விழிப்பூட்டல் நிகழ்வானது கடந்த 11.10.2014 அலஸ்தோட்டம் ஸ்ரீ நாகம்பாள் ஆலய அறநெறிப்பாடசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது. சிறுவர் கலை நிகழ்வுகள் மற்றும் சிறுவர் துன்புறுத்தல்கள் தொடர்பான கண்காட்சிப்படங்கள் என்பனவற்றுடன், சிறுவர் துன்புறுத்தல்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு என்பனவற்றை உள்ளிடக்கியதாக இந் நிகழ்வு அமைந்தது. பெண்கள் வலையமைப்பின் உறுப்பினர் க.விஜுசியா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக பட்டினமும், சூழலும் பிரதேச சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி.R.நிசாந்தினி அவர்கள், இளைஞர் அபிவிருத்தி "அகம்" நிறுவன இணைப்பாளர். திரு.க.லவகுசராசா, கிராம உத்தியோகத்தர் திரு.முனிஸ்வரன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.



## கேதார கௌரி விரதம்

கேதாரகௌரி விரதத்தின் இறுதிநாளான 23.10.2014 வியாழக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசைகள் இடம்பெறுவதையும், பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுவதுடன் புனித காப்பை பெறுவதற்கு காத்திருப்பதையும் அம்பாள் எழுந்தருளி இருப்பதையும் ஆலயத்தின் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 03

1. நுளம்புகளை விரட்டுவதற்கு உடலில் பூசப்படும் பதார்த்தம் எது?
   1. ஆமணக்கெண்ணை 2. புல்லெண்ணை
   3. கராம்புத்தைலம் 4. லெமன் எண்ணெய்
2. மிண்டி வேர் எனும் விஷேட வேரைக் கொண்ட தாவரம் எது?
   1. குருவிச்சை 2. அரசு 3. இறுங்கு
   4. ஓர்க்கிற்
3. இளமைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பிராணி
   1. ஆமை 2. வெளவால் 3. முதலை
   4. புள்ளைப் பூச்சி
4. பின்வரும் பிராணிகளில் ஊர்வன எது?
   1. தும்பி 2. தவளை 3. மயில் 4. ஆமை
5. கிராமப்புற மக்கள் பற்களைத் துலக்குவதற்கு பயன்படுத்தும் பொருள்?
   1. சுட்ட உமி 2. மரக்கரி 3. ஆலம்குச்சி
   4. மேற்கூறிய யாவும்
6. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கப்படாத பொருள்
   1. கறுவா 2. வெள்ளைப்பூடு 3. கொறுக்காய்
   4. இஞ்சி
7. பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்குக.

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

1. இக்கவிதையில் வருணிக்கப்படும் காட்சி என்ன?
2. பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.
   1. செக்கச்சிவந்த
   2. கண்விழித்தல்
3. இங்கு உள்ள உவமானத்தை எழுதுக.
4. இக்கவிதையில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.
5. நின்ற இருள் சொல்லாமல் ஓடுது' என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?

8. 8கி.மீ நீளமான பாதையொன்றில் 250மீ இடைவெளிவிட்டு மின்கம்பங்கள் நடப்பட்டன. நடப்பட்ட மின் கம்பங்கள் எத்தனை?
   1. 33 2. 34 3. 32 4. 35
9. 5மீ 40செ.மீ நீளமான ஒரு நாடாவில் இருந்து 260செ.மீ துண்டு வெட்டி எடுக்கப்பட்ட பின் எஞ்சியுள்ள நீளம்?
10. இந்த ஆண்டு எமது பாடசாலையின் ................................ விழா எமது அதிபரின் தலைமையில் நடைபெற்றது.
   (பறிசளிப்பு, பரிசளிப்பு, பரிசலிப்பு, பரிசழிப்பு)
11. ஒரு மீற்றர் கம்பியை வாங்குவதற்கு ரூ 40 தேவை. 4மீற்றர் 25 சென்ரிமீற்றர் கம்பியை வாங்க எவ்வளவு பணம் தேவை?
   1. ரூ 160 2. ரூ 170 3. ரூ 185 4. ரூ 180
12. ஒரு வரிசையில் ரவிக்கு முன்னால் 9 மாணவர்கள் நின்றனர். அனைவரும் மறுபக்கம் திரும்பி நினற போது, ரவிக்கு முன்னால் 2 மாணவர்கள் நின்றனர் எனில், வரிசையிலுள்ள மாணவர்கள் தொகை எத்தனை?
   1. 11 2. 12 3. 13 2. 10
13. ஒரு கிலோகிராம் வாழைப்பழத்தின் விலை ரூபா 80 ஆகம். 2350 கிராம் வாழைப்பழத்திற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும்?
   1. ரூ 180 2. ரூ 188 3. ரூ 189 4. ரூ 108
14. கண்டமாலை நோய்க்கு பிரதான காரணம் எது?
   1. அயடீன் குறைபாடு
   2. இரும்புச் சத்துக் குறைபாடு
   3. விற்றமின் குறைபாடு
   4. கல்சியம் குறைபாடு
15. பச்சை நிறப் பின்னணியில் யானையும், யானைப்பாகனும் உள்ள நாணயத்தாள் எது?
   1. ரூ 10 2. ரூ 500 3. ரூ 1000 4. ரூ 2000




## சிந்திக்க .. ..

புரியாததை புரிந்து கொள்ளுங்கள்
புரிந்ததை பகிர்ந்து கொள்ளுங்கள்

வெற்றி நிச்சயம்!!!

## பலசாலி முயல்

**குட்டிக்கதை**

அடர்ந்த காட்டு வழியே நடந்து கொண்டிருந்த முயல், மூங்கில் குருத்துக்களை உடைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த யானையைப் பார்த்தது. 'வணக்கம் யானையண்ணே. இன்னைக்கு நாள் ரொம்ப நல்லா இருக்கு' என்றது. தன் காலடியில் நின்ற முயல்குட்டியை அலட்சியமாகப் பார்த்தது யானை. என் கால் நகம் அளவு கூட இல்லாத நீ எல்லாம் என்கிட்டே பேசுற அளவுக்கு வளர்ந்துட்டியா? என்று கடுமையாகக் கேட்டது. முயல் குட்டியின் முகம் வாடிப்போனது.

முயல் கடற்கரைக்கு ஓடிச்சென்று திமிங்கலம் அக்கா என கூப்பிட்டது.. முயலின் சத்தம் கேட்டதும், திமிங்கலம் வந்து எட்டிப் பார்த்தது. நீயா?. முயல் அடுத்த வார்த்தை பேசுவதற்குள், என் கண்ணை விட சிறிய உன்னுடன் பேசுவதற்கு எனக்கு நேரமில்லை என்றது. முயலின் சோகம் அதிகமானது. மீண்டும் திமிங்கலத்தை அழைத்தது. 'நான் உருவத்தில சின்னதா இருந்தாலும் பலத்தில உங்களைவிட பெரியவன். வேணும்னா நேருக்கு நேர் மோதிப் பார்க்கலாமா? என்றது.

திமிங்கலத்திற்கு ஒரே சிரிப்பு சிரிப்பா வந்தது. இருந்தாலும் போட்டிக்கு ஒத்துக் கொண்டது. கொஞ்சம் பொறுங்கள் என்றுவிட்டு சென்றது. அதேபோல் யானையையும் போட்டிக்கு அழைத்தது. யானையும் சம்மதித்தது.

ஒரு கயிற்றின் முனையை திமிங்கலத்திடமும், மற்றைய முனையை யானையிடமும் கொடுத்துவிட்டு, திமிங்கலத்திடம் தான் மற்றைய முனையை பிடிப்பதாகவும், யானையிடம் தானே மற்றைய முனையை பிடிப்பதாகவும் தெரிவித்து 'இழு' என்றதும் போட்டி ஆரம்பிக்கப்படும் என்று கூறி இருவருக்கும் தெரியாது ஒரு புதருக்குள் ஒளிந்து கொண்டு 'இழு' என்றது.



அடுத்த முனையில் முயல் குட்டி இருப்பதாக எண்ணி இரண்டும் வேகமாக கயிற்றை இழுத்தன. இரண்டுக்கும் ஆச்சரியம் தாங்க முடியல்ல. சற்று நேரத்தில் கயிறு அறுந்தது.

உருவத்தை வைத்து எடை போட்டு விட்டோமே என்றெண்ணி தம்முடைய தவறை உணர்ந்து வாடியன யானையும், திமிங்கலமும். அன்றிலிருந்து முயலுடன் நண்பர்களாயினர்.

**- பலமானது உருவத்தில் மாத்திரம் தங்கியில்லை -**

செல்வன்.வ.ரிலக்ஷன், திருகோணமலை





செல்வி.கீ.ஶ்ரீமதி, திருகோணமலை

## சிந்தனைத் துளிகள்

- அன்பும், பண்பும் வாழ்வின் இரு கண்களாகும்
- அமைதியும், பொறுமையும் மனிதனின் ஆற்றலை அதிகரிக்கச் செய்கின்றன.
- தன் நன்மையைக் கருதி பிறருக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது.
- கடமைகளை மறந்து சோம்பி இருப்பவர்கள் புகழ் பெறமுடியாது.
- எந்தப் பகைவராலும் அழிக்க முடியாத கோட்டையாக இருப்பது அறிவு.

கு.ஜெகதாத்ரி, தரம் -04
கோபாலபுரம்

# குறுக்கெழுத்து புதிர் 032

முடிவுத் திகதி : 30.10.2014

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 23 த | | 22 | 13 | | ■ | 14 |
| | 15 ர | | ■ | த் | | ■ | ■ | |
| 2 | | | | | ■ | 16 | | ம் |
| | 3 | சா | 17 | | 4 | | | |
| | | ■ | | ங் | | 5 | 18 | |
| பு | 6 | 19 | ■ | 7 | | டு | | |
| ■ | | | 8 | ள் | | | ■ | ■ |
| 9 | ம் | 20 | | | 10 | | 21 | |
| | 11 | | | கு | | 12 | | ■ |

## இடமிருந்து வலமாக

1. ராணி வசிக்கும் இடம்
2. ராசிகளுள் ஒன்று - குழம்பியுள்ளது.
3. கிராமங்களில் கோவில்களில் பூசை செய்பவர்
4. கழுகு போலவே இருக்கும் பறவை - திரும்பியுள்ளது
5. காலால் எட்டி அடித்தலைக் குறிப்பது
6. கானகத்திற்கு ஒத்த சொல்
7. பந்திகளை அதிகமாகக் கொண்ட இது ...............
8. சிறுத்தையில் சந்தானத்தின் கதாபாத்திரம்
9. கோவிலில் பூசைப் பொருட்களை இதில் வைத்து கொடுப்பர்.
10. முருகன் கையிலிருப்பது போற்றி போற்றி எனும் தேவாரத்தில் வரும் சொல்
11. நாய் - குரைக்கும் : குதிரை - ...............................
12. இரு தரப்பிற்கும் இடையில் சண்டை இட்டுக் கொள்வது
16. முதல் தோன்றி மனிதர்களில் ஒருவர்.
21. திமிங்கலத்தின் ஆங்கில பதம்

## மேலிருந்து கீழாக

1. நெல்லிலிருந்து கிடைப்பது
2. கண்ணகி உடைத்த ஆபரணம்.
3. ஞாயிறுகளில் குழந்தைகள் இங்கும் செல்வர்
4. காசினை வேறு மொழியில் இவ்வாறும் அழைப்பர் - குழம்பியுள்ளது.
6. இராமாயனத்தில் சீதாதேவி இங்கு அனுப்பி வைக்கப்பட்டார். - குழம்பியுள்ளது.
13. துப்பாக்கியில் காணப்படுவது
14. அநேகர் விரும்புவது இவ் வாழ்க்கையை
15. எறிந்ததும் இலக்கை அடைந்து மீண்டும் திரும்பும் ஓர் ஆயதம் - குழம்பியுள்ளது
16. பகலில் கண் தெரியாத பறவை
17. தந்திரம் மிக்கது - குழம்பியுள்ளது
18. பேச்சாளர்கள் இதை நிகழ்த்துவர்
19. சிலரது வாயை மூடுவதற்கும் இது போடவேண்டும்.
20. கண்ணை மூடிப் பால் குடிப்பவர்.
21. ஆலமரத்திற்கு இதனை விட விழுதுகளே பலம்
22. நூலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருப்பவை
23. முனிவர்கள் மேற்கொள்வது.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

*விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :*
*மலைமுரசு. இல - 159ஏ,*
*கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*

## புதிர் 031 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | க | ழ் | வு | 2 தீ | 16 பா | 3 வ | ளி | ■ |
| 4 ழி | 5 ஆ | 19 டி | ■ | ச் | வா | ண | 17 லி | ■ |
| வு | ப் | ப | 6 கா | சு | டை | க் | ங் | 18 மீ |
| 7 ழ் | 20 பு | க | ளா | வா | ■ | க | க | கா |
| ■ | ன் | ■ | ன் | 8 லை | 21 ஆ | ம் | ம் | ம |
| ■ | ன | 22 ச | ■ | ■ | ண் | 9 தெ | னை | ன் |
| 10 வே | கை | 11 ங் | லி | ர் | டா | ற் | ■ | 23 செ |
| ■ | ■ | 12 கு | ந் | தி | ள் | 15 கு | டு | ண் |
| 13 கி | ளி | நொ | ச் | 14 சி | ல் | வ | ண் | டு |

## பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:

*செல்வன். ஜெயபிரகாஷ். வீ*
*32, மத்தியவீதி, திருகோணமலை.*

*திருமதி. ஶ்ரீ. காவேரி*
*105, சினேக் லேன், திருமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

1. lg 1000=

2. பாலனின் வயது, சந்திரனின் வயதிலும் இரு மடங்காகும். இவ்விருவரினதும் வயதுகளின் வர்க்கங்களின் கூட்டுத்தொகை 500 ஆகும். பாலனின் வயது x எனவும், சந்திரனின் வயது y எனவும் கொண்டு இரு சமன்பாடுகளை அமைக்க. இருவரினதும் வயதுகளைக் காண்க.

3. இறங்குவரிசைப்படுத்துக. $(5/7)^2, (5/6)^2, (5/8)^2$

4. மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி மடக்கையைக் காண்க:
   1. 3.456 2. 684.3 3. 39.32 4. 67.54

5. கூட்டல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 50, 21 ஆம் உறுப்பு 10 எனின், அவ்விருத்தியின்,
   1. பொதுவித்தியாசம் 2. 12ம் உறுப்பு ஆகியவற்றைக் காண்க.

6. ஒரு மாணவனுக்கு 0.75 மீற்றர் சீருடைத் துணி வழங்கப்படுகிறதாயின், 42 மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான துணியின் மொத்த நீளத்தைக் காண்க.

7. $Y = -3x^2$ எனும் வரைபின் உயர்வுப்புள்ளியின் ஆள்கூறு யாது?

8. S = ½ at2 இல் a ஐ எழுவாயாக மாற்றுக.

9. 81 ஐ 3 இன் வலுவில் எழுதுக.

10. 12026மி.லீ இல் பத்தினிடத்து இலக்கம் யாது?

11. குறித்த ஒரு வகை இனிப்புப் பைக்கற்றுகளிலே பைக்கற் ஒன்றிலுள்ள7 இனிப்புகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| a | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 |
| b | 2 | 4 | 8 | 13 | 18 | 14 | 7 | 3 | 1 |

(a - இனிப்புகளின் எண்ணிக்கை, b – பைக்கற்றுகளின் எண்ணிக்கை)

பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.
   1. பைக்கற்றுகளின் மொத்த எண்ணிக்கை?
   2. இடையத்தைக் காண்க?
   3. முதலாம் காலணையை காண்க.
   4. மூன்றாம் காலணையை காண்க.
   5. காலணை இடை வீச்சைக் காண்க.

12. ஒரு கிராமத்தைச் சேர்ந்த 60 விவசாயிகளுள் 38 பேர் பூசணியையும், 34 பேர் வெண்டியையும், 12 பேர் இவ்விரண்டையும் பயிர் செய்கின்றனர்.
   1. பொருத்தமான வென்வரிப் படம் ஒன்றை வரைக.
   2. இவ்விரண்டில் எதையுமே பயிர் செய்யாதோர் எத்தனை பேர்?
   3. வெண்டியை மாத்திரம் பயிர் செய்வோர் எத்தனை பேர்?
   4. பூசணியை மாத்திரம் பயிர் செய்வோர் எத்தனை பேர்?
   5. வெண்டி அல்லது பூசணியை பயிர் செய்வோர் எத்தனை பேர்?

13. நாற்பக்கல் ஒன்றின் ஒரு சோடி எதிர்ப் பக்கங்கள் சமனும் சமாந்தரமும் ஆயின், அது ஓர் இணைகரம் ஆகுமென நிறுவுக.

14. பின்வரும் தசம எண்களைப் பின்னங்களாக எழுதுக.
   1. 0.08 2. 5.375 3. 10.35 4. 112.125

15. -3, -1, 1, 3 … எனும் கூட்டல்விருத்தியின் முதல் 8 உறுப்புக்களின் கூட்டுத்தொகையை காண்க.

**திருமலையின் பிரபல ஆசிரியர் T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**

## பாடம் : விஞ்ஞானம்

01. பின்வருவனவற்றுள் எது ஈரூடகவாழி (உபயவாழி) விலங்காகும்?
   1. நீர்ப்பாம்பு 2. நீர்நாய் 3. தேரை 4. ஆமை

02. பின்வருவனவற்றுள் எது அயன் பிணைப்பை ஏற்படுத்தும் கூட்டமாகும்?
   1. NaCl, HCl 2. $CCl_4$, NaCl 3. HCl, MgCl 4. NaCl, MgCl

03. ஒரு மூலகத்தை வளியில் எரித்த போது பிரகாசமான மஞ்சள் நிறச் சுவாலையுடன் விரைவாக எரிந்தது. வெளிர் மஞ்சள் நிறத் மீதியாக எஞ்சியது.
   1. சோடியம் 2. இரும்பு 3. மக்னீசியம் 4. கந்தகம்

04. பித்தத்தின் ஒரு தொழிலாகக் கருத முடியாதது எது?
   1. கார ஊடகத்தை ஏற்படுத்தும் 2. உராய்வு நீக்கியாக தொழிற்படும்.
   3. விற்றமின் K அகத்துறிஞ்சலில் உதவுதல் 4. புரதத் தொகுப்பில் உதவுதல்

05. இலங்கையில் சாரா எண்ணெயை அதிக அளவில் பிரித்தெடுப்பதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருள்கள் யாவை?
   1. கறுவா, காவட்டம் புலி ஆகியன 2. ஏலக்காய், சாதிக்காய் ஆகியன
   3. வாசனைப்புல், பைனஸ் ஆகியன 4. கராம்பு, றோசா ஆகியன.

06. 1955 ஆம் ஆண்டில் வில்பத்து சரணாலயத்தில் வாழ்ந்த மான்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 550 எனின், அம்மான்களின் கூட்டத்திற்கு வழங்கும் மிகப் பொருத்தமான பெயர் எது?
   1. இனம் 2. சூழல் தொகுதி 3. சாகியம் 4. குடித்தொகை

07. குழந்தைப் பருவத்தில் வயதிற்கு ஏற்ற உயரம் இல்லாத ஒரு பிள்ளைக்கு ஓமோனைத் தொடர்ச்சியாக உட்செலுத்திய போது அது சாதாரண உயரத்துடன் வளர்ந்தது. இந்த ஓமொன்
   1. புரோலக்ரின் 2. அதிரீனலின் 3. தைரொட்சின் 4. சோமாற்றோரொபின்

08. தாவர இலையை மாப்பொருளுக்காகச் சோதிக்கையில், அது நீரில் அவிக்கப்பட்ட பின்னர் அற்ககோலில் அவிக்கப்படுவதற்குக் காரணம் என்ன?
   1. மாப்பொருளுக்காகச் சோதிக்கையில் அயடீனுடன் ஊதா நிறம் உண்டாவதற்கு அற்ககோல் தேவைப்படுகின்றமை.
   2. மாப்பொருள் அற்ககோலில் கரைகின்றமையால் அயடீன் சோதனையின் போது ஊதா நிறத்தை நன்றாகப் பார்க்கக்கூடியதாக இருக்கின்றமை.
   3. இலைகளை அவித்த பின்னர் கலங்கள் இறக்கும் அதேவேளை அற்ககோல் இலைகளினுள்ளே நன்றாகப் புகுகின்றமை.
   4. இலைகளை அவித்த பின்னர் அவற்றில் உள்ள பச்சையம் அற்ககோலில் கரைந்து இலைகளிலிருந்து அகற்றப்படுகின்றமை.

09. 0.5 மூலத்திறனுடைய NaOH கரைசல் 500ml இல் கரைந்துள்ள NaOH இன் திணிவு என்ன? 1. 10g 2. 20g 3. 30g 4. 40g

10. மேற்பரப்பைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்கள் பல நிறங்களைக் கொண்டு காணப்படுகின்றன. இந்நிறங்களுக்குக் காரணமான பல நிறப் பொருட்கள் காணப்படுகின்றன. மஞ்சள் நிறத்திற்குக் காரணமான நிறப் பொருள் எது?
   1. தைத்தேனியம் ஒட்சைட்டு 2. ஈயகுரோமேற்று
   3. குரொமியம் ஒட்சைட்டு 4. காபன்

11. உடனலமுள்ள வளர்ந்த ஒருவரின் குருதியில்உள்ள சிறுமணியற்ற வெண்குழிய வகை எது?
   1. இயோசினாடி 2. மூலநாடி 3. நடுநிலைநாடி 4. மொனோசைற்று

## பாடம் : வரலாறு

01. கலிங்க மகானின் படையெடுப்பினால் மீளமைக்க முடியாத அளவுக்கு இராசரட்டை சீரழிந்தமையினால் இராசதானி தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்தது.

   i. பின்வரும் இராச்சியங்களை தெரிவு செய்த முதல் ஆட்சியாளர்களை அடைப்புக்குள் இருந்து A,B,C ஒழுங்கில் எழுதுக.
   A – 3ம் விஜயபாகு
   B – 2ம் புவனேகபாகு
   C – 6ம் பராக்கிரமபாகு
   (யாப்பகூவ, குருணாகல், கண்டி, தம்பதெனியா, கோட்டை)

   ii. குருநாகல், கோட்டை இராச்சியங்களில் எழுதப்பட்ட இரு வரலாற்று நூல்களை பின்வரும் பட்டியலிலிருந்து தெரிந்து எழுதுக. (பன்சியபனஸ்ஜாதகய, அனாகதவங்சய, விசுத்திமார்கசன்னய, காவியசேகர, புதுகுணலங்காரய, பேசஞ்சமன்சுசா)

   iii. தம்பதெனியாவில் ஆட்சி செய்த 3ம் விஜயபாகுவின் ஆட்சிக்காலம் சமயரீதியாக முக்கியத்துவம் பெறும் விதத்தை இரு விடயங்கள் ஊடாக விளக்குக.

   iv. கி.பி 13-15ம் நூற்றாண்டு வரையிலான காலத்தில் இலங்கையின் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

02. அரசன் தொடக்கம் அடிமட்ட பிரஜைவரை நிலத்தை அனுபவிப்பது தொடர்பாக பொறுப்புக்களுடன் கூடிய ஒரு சமூகம் மானிய முறையாகும்.

   i. ஐரோப்பாவில் மானிய முறை தோற்றத்துக்கு வழிவகுத்த அந்நிய படையெடுப்புக்கள் மூன்றைத் தருக.

   ii. நிலமானிய முறையின் பொருளாதார அம்சங்கள் இரண்டை குறிப்பிடுக.

   iii. மானியமுறை வீழ்ச்சிக்கு பல காரணிகள் வழிவகுத்துள்ளன. அவற்றுள் இரண்டை விளக்குக.

   iv. ஐரோப்பாவின் மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுத்த காரணிகள் மூன்றை விளக்குக.

03. பகுதி (i) இன் கீழ்தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களை இலங்கைப்படத்திலும் (ii) இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

   i. திஸ்ஸவாவி, மகாவலிகங்கை, கல்யாணி, ரிதிபெந்திஅணை, விஜிதபுர, நந்திக்கடல், சேருவில, குதிரைமலை, ஆணையிறவு, இரணைமடு

   ii. இஸ்தான்புல், அல்சேல்ஸ் - லொறைன், கீல்கால்வாய், மும்பாய், மியன்மார், [illegible]

ஆசிரியர் : அகிலன்

## Grammar

Ex 01: Read the situation and complete the sentences.

1. (It's raining now. It's been since lunch time)
   It started raining at lunchtime.
2. (Ann and I are friends. We first met years ago)
   We've ......................................
3. (Mark is ill. He became ill on Sunday)
   He has .........................................
4. (Sarah is married. She's been married for two years)
   She got ..........................................
5. You've got a camera. You bought it ten years ago.
   I've ...............................................
6. (Sue has been in France for the last three weeks.)
   She went ...................................

Ex 02: Put **in**, **for** or **since**.

1. Please hurry up! We've been waiting .......... an hour.
2. The house is very dirty. We haven't cleaned it ......... ages.
3. Sarah has lived in London ............ 1985.
4. Tom's father has been doing the same job ........... 20 years.
5. Have you been learning English ............ a long time?
6. It' been raining ................ lunchtime.
7. I haven't have a good meal .................. last Tuesday.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிற்துறை....

வாய்ப்புக்களில் பெரும்பாலானவை தற்போதுவரை பாவிக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர் காலித் துறைமுகமானது உல்லாசப் பயணிகளுக்கான துறைமுகமாகவும், ஹம்பாந்தோட்டைத் துறைமுகமானது இறக்கியேற்றல் வியாபாரத்துக்கும், வாகன இறக்குமதிக்குமான துறைமுகமாகவும் மிளிர்கின்றன என்றும் அதனடிப்படையில் திருகோணமலைத் துறைமுகத்தை தொழிற்றுறைக்கான துறைமுகமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## 3 கிழக்கு உறுப்பினர்....

மனித உரிமைப் பேரவையிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களின் இந்த நடவடிக்கையானது இன நல்லிணக்கத்திற்கும், நாட்டின் நன்மதிப்பிற்கும் குந்தகம் ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ளதாக தெரிவித்து நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேசப்பற்றுடைய அமைப்பின் அழைப்பாளரான கால்லகே ரவீந்திர ரொஸான் என்ற நபரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நுகோகொடை பொல்லவத்த என்னும் இடத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் முன்னாள் ஆணையாளர் நவனீதம்பிள்ளைக்கு இந்த மாகாணசபை உறுப்பினர்கள் கடிதமொன்றின் மூலம் நாட்டுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தனர் என மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## சுகாதாரத் தொழிலா...

நியமனங்களான 6 வீதித்தொழிலாளர்கள் மற்றும் 6 துப்புரவுத் தொழிலாளர்கள் நியமனங்களில் ஏற்பட்டுள்ள குளறுபடிகளில் ஆளுனரின் தலையீட்டை அடுத்து துப்புரவுத் தொழிலாளர்களின் நியமனங்கள் திருத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கண்ணன் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

எனினும் வீதித் தொழிலாளர் நியமனங்களில் தற்போதும் இழுபறிநிலை தொடர்வதாகத் தெரியவருகின்றது.

வீதித்தொழிலாளர் நியமனத்தில் பட்டணமும் சூழலும் பிரதேச சபை அலுவலகத்தில் வேலை செய்யும் மகளிர் சிலருக்கு வீதித் தொழிலாளர்கள் என்ற போர்வையில் நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளதாகவும் அவர்கள் அலுவலகத்தில் வேலை செய்பவர்களேயன்றி வீதியில் வேலை செய்பவர்கள் இல்லை என்றும், இதனால் உண்மையில் வீதியில் வேலை செய்யும் தொழிலாளருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

## 2ம் உலகப்...

மாதம் 9ஆம் திகதி, மின்னேரியா விமானப்படைத் தளத்திலிருந்து பயணித்த கெட்லினா விமானம், சுமார் ஒன்றரை மணித்தியாலத்தின் பின்னர் அதன் என்ஜின் ஒன்று செயலிழந்த நிலையில் மீண்டும் திரும்பியுள்ளது.

இவ்வாறு இந்த விமானம் மீண்டும் திரும்பும் போதே, விபத்துக்குள்ளாகியதாகவும் அதில் பயணித்த விமானப்படை வீரர்கள் 11பேரும் உயிர் தப்பியதாகவும் விமான நிலையத்திலுள்ள புராதன தகவல் புத்தகத்தில் பதிவாகியுள்ளது.

திருகோணமலை துறைமுகத்திலிருந்து சுமார் 80 கிலோமீற்றர் தெற்காகவுள்ள கல்குடா கடற்பரப்பிலேயே இந்த விமானம் விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியுள்ளது.

இந்நிலையிலேயே 70 வருடங்களின் பின்னர் இந்த விமானத்தின் அலுமினியத் தகடொன்று மீனவரின் வலையில் சிக்கியுள்ளது. இது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்ட போதே குறித்த விமானத்தின் பாகங்கள் மீட்கப்பட்டன என்று அவர் மேலும் கூறினார்.

## 15000 பேருக்கு....

இந்த விடயம் பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் செறிந்து வாழும் கிண்ணியா, குச்சவெளி உள்ளிட்ட பிரதேசங்களில் அதிகளவில் அடையாள அட்டை இன்றி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களின் எண்ணிக்கை சுமார் 15000 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள போதிலும் அதனை விடவும் அதிகளவானவர்களுக்கு அடையாள அட்டை கிடையாது என தெரிவிக்கப்படுகிறது.

உரிய ஆவணங்கள் இல்லாத காரணத்தினால் அடையாள அட்டைகளை விநியோகிப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுகின்றதாம்

தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு அடையாள அட்டைகளை விநியோகம் செய்வதில் அரசாங்கம் ஆர்வம் காட்டாமை ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்தே என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன.

## ஆட்டிலறி....

ஆட்டிலறிப்பிரிவு தற்போது அமைந்துள்ள காணியில் மூன்று ஏக்கர் காணியினைக் கையகப்படுத்தும் அறிவித்தலை வெளியிட்டுள்ள மூதூர் பிரதேசச் செயலகம் அவ்வறிவித்தலில் அக்காணிகள் யாருக்குச் சொந்தமானவை எனத் தெரியாது எனக் குறிப்பிட்டுள்ளது.

இவ்வறிவித்தலின் படி அக்காணியினை நிலஅளவைக்குட்படுத்தும் அதிகாரத்தை திருகோணமலை மாவட்ட நிலஅளவை அத்தியட்சகர் பெற்றுள்ளார்.

## மாவட்ட ஒருங்கிணைப்பு...

இன்னும் முடிவடையவில்லை. முடிந்ததும் தங்களுக்கு தமிழ் மொழியிலான அறிக்கை அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபை உறுப்பினர்களான தண்டாயுதபாணி, நாகேஸ்வரன், ஜனார்த்தனன் ஆகியோரும், திருகோணமலை நகரசபைத் தலைவர் செல்வராசாவும் இக்கூட்டத்தில் சமுகமளித்திருக்க வில்லை. பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் எந்தவொரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் கலந்து கொள்வதில்லை என கூட்டத்தில் கலந்து கொண்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கடும் நடவடிக்கை...

தண்டனை அல்ல. ஒழுக்காற்று இடமாற்றமும் இல்லை. அதிகாரிகள் இவருக்கு உதவியே செய்துள்ளனர்.

இந்த பரிசோதகர் திணைக்களத்தையும் ஊழியர்களையும் தனக்கு சாதகமாக பயன்படுத்த முயற்சி செய்துள்ளார். இவருக்காக தொழிற்சங்க போராட்டத்தில் பரிசோதகர்கள் ஈடுபட்டுள்ளமை வருத்தத்தை தருகின்றது.

குறித்த பொதுசுகாதார பரிசோதகர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இவர் இலஞ்சம் வாங்குவதில் முன்னோடி. இதற்கான ஆதாரங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. மாடு அறுக்கும் தொழுவத்தில் மாதம் ஒன்றுக்கு 25,000 ரூபாய் வீதம் இலஞ்சம் பெற்று வந்தள்ளமை எமக்கு ஆதாரங்களுடன் கிடைக்கப்பெற்றுள்ளது. இவர் மீது விரைவில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

காத்தான்குடி பொது சுகாதார பரிசோதகராக கடமையாற்றும் நபர் ஒருவர், கடந்த 9ஆம் திகதி தொடக்கம் கல்முனை மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடமாற்றம் முறையற்றதென கூறி அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கிழக்கு மாகாணத்தில் திங்கட்கிழமை (20) முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

## ஒரு மில்லியன்.....

கண்காணிப்பில் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் முக்கிய சூத்திரதாரி மூதூர் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மூதூர் பிரதேசத்தையே வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது..

சம்பவம் தொடர்பாக தெரியவந்துள்ளதாவது குறித்த சூத்திரதாரியும் அவரது சகாக்கள் போலச் செயற்பட்ட நால்வரும் ஒரு மில்லியன் முகப்பெறுமதியைக் கொண்ட அமெரிக்க டொலர் நோட்டொன்றை 15 மில்லியன் இலங்கை ரூபாய்களுக்காக மாற்றுவதற்குப் பேரம் பேசியுள்ளனர்.

எனினும் குறித்த ஒரு மில்லியன் அமெரிக்க டொலரானது எவ்வித பெறுமதியும் அற்றது என்பதுடன் ஞாபகப் பரிசுச் சின்னமாகவே பதிப்பிக்கப்பட்டதும் என்பதும் தெரியவந்துள்ளது. இத் தகவலை இலங்கையின் மத்திய வங்கி மற்றும் அமெரிக்க தூதுவராலயம் என்பவை உறுதிப்படுத்தியுள்ளன.

இந் நிலையில் குறித்த பரிசு நோட்டை மோசடியான முறையில் பணமாக்க முயற்சித்தவர்களே இப்போது கைதாகியுள்ளனர்.

## பட்டப்...

தொடரும் மாணவர்கள் திப்புளோமாப் பட்டங்களைப் பெற்றுக்கொள்வதுடன் அவர்களை பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கும் நடைமுறையே தற்போது வரை காணப்படுகின்றது.

இம்முறையில் மேலும் ஒருவருடப் பயிற்சியை தேசிய கல்வி நிறுவனத்தின் கீழ் இம்மாணவர்களுக்கு வழங்கி அவர்களுக்கு பட்டதாரிப் பட்டங்களை வழங்கும் செயன்முறை அடுத்த கல்வியியற் கல்லூரிப் பிரிவு ஆரம்பிக்கப்படும்போது நடைமுறைப்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வி முறையில் உருவாக்கப்படும் சீர்திருத்தங்களுக்கு அமையவே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

## கந்தளாய் குளம்...

தற்பொது மழை பெய்து வருவதையடுத்து அக்குழிகளை மூடி நீர் நிற்பதால் குளத்தில் குளிக்க வருபவர்களின் பாதுகாப்புக் கருதியும் சட்டவிரோத இரத்தினக் கல் அகல்வாளர்களிடமிருந்து குளத்தின் நீர்ப் படுக்கைகளைப் பாதுகாக்கவும் என சிறப்பு அதிரடிப் படையினர் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனராம்.

## இடம்பெயர்ந்தோர் உணவுக்காய் கையேந்தும் அவலம்



சம்பூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் ஒருவேளை உணவினைப் பெறுவதற்குக்கூட மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தண்டாயுதபாணி தெரிவித்துள்ளார்.

சம்பூர் மக்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சம்பூர் பிரதேசத்தின் அகதி மக்களின் பிரச்சினை இன்று பெரிய பிரச்சினையாக திருகோணமலை மாவட்டத்திலே வளர்ந்து நிற்கின்றது. இந்த மக்கள் அடிப்படையான வாழ்வாதார வசதிகள் அற்ற வகையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உணவுக்குக்கூட அவர்கள் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. சம்பூரிலே இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இப்போது அகதி முகாம்களில் வசதியற்ற நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இதனை அரசாங்கம் நலன்புரி நிலையங்கள் என்று சொல்கின்றது. ஆனால், இந்த மக்களுடைய நலன்களை அடிப்படை வசதிகளையாவது மேம்படுத்தக்கூடிய அளவு வதிகள் இந்த அகதி முகாம்களில் இல்லை என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# ஹஜ், உம்றாவில் தொங்கோட்டம் ஓடுதல் (அல்குர்ஆன் விளக்கம்)



கடந்தவார தொடர்ச்சி .. ..

ஸ.்.பாவில் ஆரம்பித்து மர்வாவை அடைவது ஒரு ஓட்டமாகவும் பின்னர் மர்வாவில் இருந்து ஸ.்.பாவுக்கு வருவது இரண்டாம் ஓட்டமாகவும் கணிக்கப்படும். இந்த வசனத்தை மேலோட்டமாகப் பார்க்கும் போது ஹஜ், உம்றா செய்பவர் அவ்விரண்டு மலைகளையும் சுற்றுவது குற்றமில்லை என்றுதான் கூறுகின்றது. இதை வைத்துச் சுற்றுவது குற்றமில்லை, சுற்றாமல் விடுவதே நல்லது என்று கூட சிலர் நினைக்கலாம். அல்லது சுற்றுவது கட்டாயம் இல்லை என்று கூடப் புரிந்து கொள்ளலாம்.குர்ஆனின் சரியான அர்த்தத்தைப் புரிந்து கொள்வதற்குக் குறித்த வசனம் என்ன காரணத்திற்காக அருளப்பட்டது என்ற அறிவு அவசியமானதாகும்.

ஹுதைபிய்யா உடன்படிக்கையின் பின்னர் முஸ்லிம்கள் ஹஜ், உம்றாவுக்கு மக்கா சென்று வந்தனர். அப்போது க.்.பா, காபிர்களின் கையில் இருந்தது. ஸ.்.பா-மர்வா மலைகளுக்கிடையே சிலைகளும் இருந்தன. ஸ.்.பா-மர்வாவுக்கிடையில் தொங்கோட்டம் ஓடும் போது அந்தச் சிலைகளையும் முஸ்லிம்கள் சுற்றி வர நேரிட்டது. இதனால் தாம் தவறு செய்கின்றோமோ என்ற ஐயமும் குற்ற உணர்வும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டது. அந்த ஐயத்திற்குப் பதிலாகவே இந்த வசனம் அருளப்பட்டது.



ஸ.்.பா-மர்வா என்பது அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்கள். நீங்கள் சிலைகளுக்காக அதைச் சுற்றவில்லை. அல்லாஹ்வின் கட்டளைக்காகச் சுற்றுகின்றீர்கள். எனவே, நீங்கள் சுற்றுவதில் குற்றமில்லை என்று இந்த வசனம் விளக்குகின்றது. இந்தப் பின்னணி இல்லாமல் இந்த வசனத்தைப் பார்த்தால் சுற்றுவது குற்றமில்லை எனக் குர்ஆன் கூறுகின்றது.

முற்றும் .. ..




# வாரமொரு ஜோக்

- அருணன் -

- புலிக்கு பின்னாடி போன மானும்,
  பொண்ணுக்கு பின்னாடிப் போன ஆணும்..
  பிழைத்ததாக சரித்திரம் இல்லை..

  இப்படிக்கு
  சிங்கிளா வாழ்ந்தாலும் சிங்கம் போல வாழ்வோர் சங்கம்...

**ஹா! ஹா! ஹா!**

- லவ்வர் கிட்ட லவ்வ சொல்லி
  பதில் வரலைன்னா கூட தாங்கிக்கலாம்..........! - ஆனால்
  பரீட்சை அறையில் கூப்பிட ...... கூப்பிட .......
  நண்பன் திரும்பாம இருக்கிற வலிய தாங்கவே முடியாது..........!

**ஹா! ஹா! ஹா!**

- கல்யாண வீட்டில் செருப்பை தொலைத்தவன் எழுதிய கவிதை
  "உள்ளே ஒரு ஜோடி சேர்ந்துவிட்டது"
  "வெளியே ஒரு ஜோடி தொலைந்துவிட்டது"

**ஹா! ஹா! ஹா!**

- கணவன் : அந்த கருப்பு நாய்க்கு சோறு வச்சியா???
  மனைவி : ஆமாங்க.. ஏன் கேட்கிறீங்க???
  கணவன் : இல்ல. அந்த நாய் தெருவோரமா செத்து கிடந்துச்சு.. அதான் கேட்டேன்...

**ஹா! ஹா! ஹா!**

- பஸ் ரூட்ல பஸ் போகும், ட்ரைன் ரூட்ல ட்ரைன் போகும்! பீட் ரூட்ல என்ன போகும்?

**ஹா! ஹா! ஹா!**

- அவள் என்னை திரும்பி பார்த்தாள்.. நானும் அவளைப் பார்த்தேன்..
  அவள்..மறுமடியும் என்னைப் பார்த்தாள், நானும் அவளை மறுபடியும் பார்த்தேன்.!
  ஏனெனில் இருவருக்குமே பரீட்சையில் ஒன்னுமே தெரியல்ல.






# வேலை செல்லும் பெண்களுக்காக

வேலைக்கு செல்லும் பெண்களுக்கு, தினமும் அலுவலகம் செல்லும் டென்ஷனில் சருமத்தை பாதுகாப்பது சற்று கடினமான காரியமாகவே உள்ளது. எப்போதும் ப்ரஷ்ஷாக இருக்க உங்களுக்காகவே பிரத்யேக குளியல் பவுடர் இங்கு கொடுக்கப்பட்டுள்ளது.

**எலுமிச்சை பேஸ் பேக்**

**தேவையான பொருட்கள்**

எலுமிச்சை தோல் -.50 கிராம், கஸ்தூரி மஞ்சள் - 100 கிராம், கசகசா - 50 கிராம், பயத்தம் பருப்பு - கால் கிலோ, கடலை மாவு - 6 தே.க, முல்தானி மட்டி - அரை தே.க, எலுமிச்சைச் சாறு- 4 தே.க

**செய்முறை**

முதலில் எலுமிச்சை தோல், கஸ்தூரி மஞ்சள் மற்றும் கசகசாவை மெஷினில் நன்கு அரைத்துக் கொள்ளுங்கள். பிறகு கடலை மாவு, முல்தானி மட்டி மற்றும் எலுமிச்சை சாற்றை இதனுடன் கலந்து கொள்ளுங்கள். இந்த பவுடரை முகம் முதல் பாதம் வரை பூசி பத்து நிமிடங்கள் கழித்து குளியுங்கள். ஒரு நாள் விட்டு ஒரு நாள் இந்த ஹபேக்"கை உடலில் தேய்த்து குளிப்பதன் மூலம் சருமம் சுத்தமாகுவதுடன், இழந்த பொலிவும் விரைவிலேயே திரும்ப கிடைக்கும். வேலை டென்ஷனுடன் முக டென்ஷனும் இல்லாது போகும்

# இளநரையால் அவதி தேவையில்லை

இன்றைய காலத்தில் இளைஞர்களின் பெரிய பிரச்னையாக இருப்பது இளநரை. தலையில் பொடுகு அதிகம் இருந்தால், அவை வேர்க்கால்களை அடைத்து மெலனின் உற்பத்தியை குறைக்கின்றன, அப்போது வெள்ளை முடி தோன்றும்.



தலைக்கும் பயன்படுத்தும் வீரியம்மிக்க ஷாம்புகளாலும், புரதம், இரும்பு சத்து குறைவதனாலும் வெள்ளை முடி தோன்றலாம். எனவே இளநரையை தடுக்க வீட்டிலேயே இயற்கையான பொருட்களை கொண்டு ஷாம்பு தயாரிக்கலாம்.

நெல்லிமுள்ளி, செம்பருத்தி இலை, மருதாணி இலை. இந்த மூன்றையும் சம அளவு எடுத்து, பொடி செய்யுங்கள். அதிலிருந்து 4 தே.க எடுத்து, இதனுடன் தேங்காய் பால் - 2 தே.க, கொஞ்சம் டீ டிகாஷன் (பேஸ்ட் ஆகும் அளவுக்கு) கலந்து, தலைக்குத் தேய்த்துக் குளியுங்கள்.

வாரம் ஒருமுறை இதுபோல குளித்து வந்தால், இளநரை கிட்டவே வராது.



# தயிர் உருளை

**தேவையான பொருட்கள்**

சிறிய உருளை கிழங்கு - 1/2 கிலோ, பெரிய வெங்காயம் - 2, சற்று புளித்த தயிர் - 1/2 கப், இஞ்சி, பூண்டு விழுது - 2 மே.க, மிளகாய் தூள் - ½ மே.க , மிளகு தூள் - ½ மே.க, கரம் மசாலா - ½ மே.க, மஞ்சள் தூள் - ¼ மே.க, எண்ணெய் - தேவையான அளவு, உப்பு - தேவையான அளவு

**செய்முறை**

உருளைக்கிழங்கை வேக வைத்து தோல் உரித்துகொள்ளுங்கள். வெங்காயத்தை பொடி பொடியாக நறுக்கவும். பின் எண்ணெய் காய வைத்து வெங்காயத்தை போட்டு நன்கு வதக்கவும். பின்பு மிளகாய் தூள், மஞ்சள் தூள், மிளகு தூள், உப்பு சேர்த்து வதக்கவும். பின்னர் உருளைக்கிழங்கு சேர்த்து 10 நிமிடம் சிறு தீயில் வைத்து வதக்கவும். பின்னர் கரம் மசாலா, தயிர் சேர்த்து சுருள கிளறி இறக்குங்கள்.




# பெரிய பிள்ளை ஆவது எப்போ?

பருவமடைதல் பெண்களுக்கு மட்டுமானது அல்ல. ஆண் குழந்தைகளும் பிள்ளைகளாக வளர்ந்து பருவமடையவே செய்கிறார்கள். ஆண் குழந்தை 'பெரிய பிள்ளை' ஆவது எப்போது?

இரவு படுக்கையில் தானாகவே விந்து வெளியேறிவிட, அவசர அந்தரமாக காலையிலேயே பாத்ஷரும் சென்று குளித்து அல்லது உடலைச் சுத்தம் செய்து சாரத்தையும் கழுவிப் போட்டுவிட்டு, ஒன்றும் தெரியாத அம்மஞ்சி போல வந்து அமர்ந்து கொள்கிறானே அப்பொழுதா? இல்லை! ஆண்களைப் பொறுத்தவரையில் பருவமடைதல் என்பது ஒரு நாளில் திடீரென ஏற்படும் ஒரு நிகழ்வு அல்ல.



படிப்படியாக ஏற்படும் மாற்றமாகும். உடல் வளர்கிறது.
குரல் தடிப்படைகிறது. மீசை அரும்புகிறது.
ஏனைய இடங்களிலும் முடி வளரச்சி ஏற்படுகிறது.


9 முதல் 14 வயதுவரையான காலத்தில் பொதுவாக ஏற்படுகிறது. ஒவ்வொரு பையனும் தனது வளர்ச்சிக் கட்டத்தின் ஓரிடத்தில் பருவமடைகிறான். தனது நண்பனைப் போல தனக்கு விரிந்த மார்பும், உயர்ந்த தோளும் இல்லையே என சில பையன்கள் கேட்பதுண்டு. எல்லோரது வளர்ச்சியும் ஒரே விதமாக இருப்பதில்லை. ஒவ்வொருவரும் உடல் இயல்புக்கு ஏற்ற விதத்தில் வளர்கிறார்கள். பருவமடைகிறார்கள்.

விரும்பிய ஒருவரைப் பற்றி மீள மீள நினைப்பது அப் பருவகாலத்திற்கான உணர்வுதான். பருவடைய ஆரம்பிக்கும்போது ஏற்படும் மற்றொரு மாற்றம் உடல் முடியாகும். முகத்தில் மீசை தாடி அரும்பும், நெஞ்சில் வளரும். அக்குளுக்குள் தடிப்பாக வளரும். கீழே உங்கள் உறுப்புக்கு மேலும் தோன்றும். இதுவும் ஹோர்மோன சுரப்பிகளால் ஆவதுதான். ஆரம்பத்தில் உங்கள் அடரீனல் சுரபி சுரக்கத் தொடங்கும். பின் மூளையில் உள்ள பிற்றியுடரி சுரப்பி அதிகம் சுரக்கும். இதனால் உங்கள் விதைகள் வளரும். அதிலிருந்து பாலியல் ஹோர்மோன் ஆன டெஸ்டஸ்டரோன் சுரக்கும். முடி வளரும். ஏனைய மாற்றங்களும் தொடரும்.

மகன்மாரின் சேர்ட்டை துவைக்க எடுக்கும்போதுதான் சில அம்மாக்களுக்கு புரிய ஆரம்பிக்கிறது. பருவமடையும் காலத்தில் உடல் ஹோர்மோன்கள் முழு அளவில் வேலை செய்கின்றன. எனவே வியர்வை அதிகமாகவே சுரக்கச் செய்யும். வியர்வையில் நீர் மட்டுமே உள்ளது. ஆனால் மிகச் சிறிதளவு அமோனியா, யூரியா, சீனி, உப்பு ஆகியவையும் இருக்கும்.

இவ்வாறு நிகழும்போது பல பையன்கள் இதையிட்டு வெட்கப்படுவதுண்டு. வேறு பலர் குற்ற உணர்வு கொள்வதும் உண்டு. இதனால் உடல் நலத்தில் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. இது இயற்கையான செயற்பாடு.

ஆண் பெரிய பிள்ளையாகும் விடயத்தை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு விளக்குவது அவசியம்.



# இவ்வார ராசிபலன்கள்

**மேஷம்** : உடன் பிறந்தவர் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும்.

**ரிஷபம்** : நிலுவைப் பணம் வசூலாகும். வாழ்வியல் நடைமுறை சுமுகமாகும்.

**மிதுனம்** : தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறி, உபரி பண வரவு கிடைக்கும்.

**கடகம்** : வெளியூர் பயணம் புதிய அனுபவம் பெற்றுத் தரும்.

**சிம்மம்** : பொது நலப் பணி புரிவதிலும் ஆர்வம் வளரும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு முறை பின்பற்ற வேண்டும்.

**கன்னி** : அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம்.

**துலாம்** : பணத் தேவையின் அளவு அதிகரிக்கும். எதிர்மறையான செயல்களை வெல்லும் திறன் அறிவீர்கள்.

**விருச்சிகம்** : புத்திரரின் நற்செயல், பெருமை தேடித் தரும்.

**தனுசு** : எதிரி, வியந்து விலகும் அனுகூலம் உண்டு. இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் மகிழ்ச்சி தரும்.

**மகரம்** : எதிரியால் வரும் சிரமத்தை சரி செய்ய, கூடுதல் பணம் செலவாகும்.

**கும்பம்** : பணம் கொடுக்கல், வாங்கலில் நிதான அணுகுமுறை பின்பற்றவும்.

**மீனம்** : அரசு தொடர்பானவர்களிடம், பகைமை வராமல் பேசுவது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாடசாலைகளுக்கிடையிலான எறிபந்து சுற்றுப்போட்டி

அகில இலங்கை எறி பந்து சம்மேளத்தினால் தேசிய மட்டத்தில் பாடசாலைகளுககிடையே நடாத்தப்பட்ட எறிபந்து சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.



## மாபெரும் பூப்பந்து சுற்றுப் போட்டி



ஆரையம்பதி ஏசியன் விளையாட்டுக்கழகத்தால் நடாத்தப்பட்ட மாபெரும் பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டி உலக தமிழ் பூப்பந்தாட்ட பேரவை மற்றும் பிரான்ஸ் தமிழர் உள்ளரங்க விளையாட்டு அமைப்புகளது அனுசரணையுடனும் மற்றும் மட்டக்களப்பு அமெரிக்கன் ட்ரிங்கிங் வாட்டர், யமஹா ப்ளாஸா, கன்டோஸ், டயலொக் நிறுவனங்களின் உப அனுசரணையுடன் ஆரையம்பதி பிரதான பூப்பந்து உள்ளரங்கில் 18, 19.10.2014 களில் நடைபெற்றது. இப்போட்டியில் திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலிருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.



## கிரிக்கட் பயிற்சி முகாம்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் இலங்கை கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் சங்கத்தினால் யாழ் மாவட்ட பாடசாலைகளின் 13, 14, 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் வீரர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.





## கோல் அடித்த வீரர் பரிதாப மரணம்

Bethlehem Vengthlang FC மற்றும் Chanmari West FC ஆகிய இரு அணிகளுக்கும் இடையே கால்பந்து போட்டி ஒன்று மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. இந்த போட்டியின் 62வது நிமிடத்தில் கால்பந்து வீரர் Peter Biaksangzuala என்பவர் மிகுந்த சிரமப்பட்டு ஒரு கோலை அடித்தார். கோல் அடித்த சந்தோஷத்தில் அவர் தன்னையும் அறியாமல் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்த மைதானத்தில் சம்மர்சால்ட் அடித்தார். அப்போது எதிர்பாராதவிதமாக அவரது ஸ்பைனல்கார்டில் முறிவு ஏற்பட்டு மைதானத்திலேயே மயங்கிவிழுந்தார்.





ஐந்து நாட்கள் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த அந்த வீரர் 20.10.2014 அன்று மருத்துவமனையில் மரணமடைந்துவிட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

## ஸ்டார்ஸின் மாபெரும் கிரிக்கட் சுற்று

பிரபல தயாரிப்பாளர் ஏக்தா கபூர், பாக்ஸ் கிரிக்கெட் லீக் (பிசிஎல்.,) எனும் கிரிக்கெட் விளையாட்டு ரியாலிட்டி நிகழ்ச்சி ஒன்றை பிரமாண்டமாய் நடத்த இருக்கிறார். இதில் 150 சின்னத்திரை நட்சத்திரங்கள் பங்கேற்க இருக்கின்றனர். மைதானத்தில் நடப்பதை மட்டுமல்லாமல், லாக்கர் 'ரூமில் நடக்கும் சுவாரஸ்யமான வி'யங்களையும் கலந்துகட்டி இந்த நிகழ்ச்சியை பிரமாண்டமாய் நடத்த இருக்கின்றனர். சுமார் 8 அணிகள் இந்த போட்டியில் விளையாடுகின்றனர். "இந்த விளையாட்டில் பெண்களும், ஆண்களுடன் சேர்ந்து கிரிக்கெட் விளையாடுவார்கள். டெலிவிஷன்களில் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியை யாரும் பார்த்திருக்க மாட்டார்கள். அந்தளவுக்கு இந்த கிரிக்கெட் ரியாலிட்டி ஷோ நிகழ்ச்சி இருக்கும்" என்று தெரிவித்தார் ஏக்தா கபூர்.



## சர்வதேசச் செய்திகள்

### • கல்லெறிந்து மரண தண்டனை

தென் சோமாலியாவில் பெண்ணொருவரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய குற்றச்சாட்டில் 18 வயது இளைஞன் ஒருவனுக்கு கற்களால் எறிந்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

### • நால்வருக்கு சிறைத் தண்டனை

அல்கொய்தா இயக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றத்திற்காக நான்கு பெண்களுக்கு, 4 முதல் 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இவர்களது மகன்கள் ஜிஹாத் போராளிகள் ஆவற்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.



### • உயிர்நீத்தோருக்கு நிதியுதவி

தனது துயரங்களைக் கண்டு தாங்கிக்கொள்ள முடியாமல் உயிர்நீத்த 193 பேரின் குடும்பங்களுக்கு, அ.தி.மு.க. சார்பில் தலா 3 இலட்சம் ரூபா குடும்ப நல நிதியுதவி வழங்கப்படும் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

### • இப்படியும் ஒரு போராட்டமா?



ரஷ்யாவில் அரசாங்கத்தின் அணுகுமுறை சரியில்லை என்றும், பொலிசார் நடவடிக்கை சீர்திருத்தப்பட வேண்டும் என்றும் ஒரு நபர் பலகாலமாக வித்தியாசமான முறையில் போராடி வருகிறார். சமீபத்தில் அவர் ரஷ்யப் பொலிசாருக்கு எதிராக ஒரு போராட்டத்தை நடத்தி, தன்னை இழுத்துச் செல்லாதவாறு, நிலத்தில் வைத்து தனது மர்ம உறுப்பில் ஆணி அறைந்தார். அதற்கு முன்னதாக அவர் தன் உடலை வெட்டிக் காயப்படுத்தி ஒரு போராட்டத்தில் ஈடுபட்டார். இது இவ்வாறு இருக்கையில் சமீபத்தில் நடு வீதியில் நிர்வாணமாக நின்று, தனது காதை அறுத்துள்ளார்.

### • உளவு பார்த்ததா?

சுவீடன் நாட்டை உளவு பார்த்ததாக ர'யா மீது சுவீடன் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளது. ஆனால் இந்த குற்றச்சாட்டுக்கு ரஷ்யா மறுப்பு தெரிவித்துள்ளது.

### • தாயின் கோப வெளிப்பாடு – மனித உரிமை ஆட்சேபனை

குறித்த பெண் தனது இளம் குழந்தையை கடுமையாக திட்டிக்கொண்டு குறித்த குழந்தை அணிந்திருந்த காற்சட்டையை கழற்றிவிட்டு பிரம்பால் தாக்குவதோடு கால்களால் உதைக்கின்றார். மேலும் கைகளால் சரமாரியாக கன்னத்தில் அறைவதோடு கால்களால் தலையில் எட்டி உதைத்தும் கையில் இருந்த தடியால் குழந்தையின் வாயினுள் குத்தியும் தண்டனை வழங்கியுள்ளார். இது பெரும் சர்ச்சையை எழுப்பியுள்ளது.

### • பிணையில் விடுதலை

சொத்துக் குவிப்பு வழக்கில் சிறைத்தண்டனை அனுபவித்து வந்த தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் பெங்களூர் அக்ரஹார சிறையில் இருந்து வெளியேறினார். சிறை வளாகத்தில் இருந்து வெளியேவரும் ஜெயலலிதாவை வரவேற்க தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அமைச்சர்கள், எம்.பி.கள், மேயர்கள் உள்பட 500-க்கு மேற்பட்டோர் சுமார் 4 மணி நேரம் மழையையும் பொருட்படுத்தாமல் காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### • இந்துக்கள் மீண்டும் வருவர்.

கடந்த பல மாதங்களாக பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் பதவி விலக வேண்டும் என்று தொடர் போராட்டம் நடத்தி வரும் முன்னாள் கிரிக்கெட் வீரரும், பாகிஸ்தானின் எதிர்க்கட்சி தலைவருமான இம்ரான் கான், நேற்று பேசிய ஒரு கூட்டத்தில் "பாகிஸ்தானில் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்க்கொண்டு நாட்டை விட்டு வெளியேறிய இந்துக்கள், நாட்டில் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சி ஆட்சிக்கு வந்ததும் நாடு திரும்புவார்கள் என்று [illegible]" என்றார்.

### • சந்தேகத்தில் சுட்டார் தந்தை

பாகிஸ்தானில் உள்ள ஒருவர், தனக்கும், தனது மனைவிக்கும் சர்க்கரை நோய் இல்லாத போது தனது குழந்தைக்கு மட்டும் எப்படி சர்க்கரை நோய் வந்தது என்று சந்தேகப்பட்டு, குழந்தையையும், மனைவியையும் சுட்டுக்கொன்றுள்ளார்.

### • காதலனிடம் வாங்கிக் கட்டிய ஒபாமா

வாக்கெடுப்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா வாக்களித்து கொண்டிருந்தார், அவர் அருகே ஆயியா கூப்பர் என்ற ஒருவரும் வாக்களித்துக் கொண்டிருந்தார். வாக்களித்து முடிந்தவுடன், ஒபாமா அப்பெண்ணை கட்டிப்பிடித்து உதட்டில் முத்தமிட்டார், இதனை அவதானித்த ஆயியாவின் காதலன் மைக் ஜோன்ஸ் எரிச்சலடைந்து ஒபாமாவை நேருக்கு நேராக பார்த்து எனது காதலியை தொடாதே என எச்சரிப்பது போன்று பேசியுள்ளார்.

### • பெண்ணை உயிருடன் புதைத்த ஐ.எஸ்.ஐ.எஸ்

ஈராக் மற்றும் சிரியாவில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ், பெண் ஒருவர் பாலியல் குற்றம் செய்ததாக கூறி மண்ணில் அவரை உயிருடன் புதைத்து அதை காணொளியாய் வெளியிட்டுள்ளனர். இந்த காணொளியில் தீவிரவாதிகளுடன் இணைந்து அப்பெண் தந்தையும் தனது மகளுக்கு மரண தண்டனையை அழித்துள்ளார். இந்நிலையில் அப்பெண் தந்தையிடன் மன்னிப்பு கேட்பது போலவும் ஆனால் அதற்கு நான் மன்னிக்க மாட்டேன் ஆனால் அல்லா வேண்டுமானால் மன்னிகலாம் என கூறியுள்ளார்.

### • என்னை பெண்கள் கற்பழித்தார்கள்



கடந்த பல மாதங்களாக பிரேசில் நாட்டில் பல பெண்கள் கொடூரமான முறையில் கொலைசெய்யப்பட்டு வந்தார்கள். 16 வயது தொடக்கம் 39 வயதுடைய பல பெண்கள் இவ்வாறு கொலைசெய்யப்பட என்ன காரணம் என்று தெரியாமல் அன் நாட்டு பொலிஸ் இலாகா தலை சுற்றி குழப்பத்தில் இருந்தார்கள். கடந்த சில தினங்களுக்கு முன்னரே அவர்கள் அதிரடியாக இக்கொலையாளியைக் கைதுசெய்தார்கள். றோச்சா எனப்படும் 26 நபரே இக்கொலைகளைப் புரிந்துவந்த நபர் ஆவார்.

அவர் தற்போது சிறைச்சாலையில் இருக்கிறார். அவர் தனது கைகளை காயப்படுத்தி சிறைக் கம்பிகளுக்கு வெளியே கையை நீட்டி தான் கொலை செய்தமைக்கு காரணங்கள் உண்டு என்று உரக்க கத்தியுள்ளார் ! தான் சிறுவயதாக இருந்தபோது தன்னை பல பெண்கள் கற்பழித்துள்ளார்கள், என்று திடுக்கிடும் தகவல் ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதன் காரணமாகவே தனக்கு பெண்கள் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

### • வெள்ளை மாளிகையில் எங்கள் கொடி பறக்கும்



ஆஸ்திரேலியாவில் இருந்து வீட்டை விட்டு ஓடிப்போய் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தில் செர்ந்த 17 வயது இளைஞர் ஒருவர் வெளியிட்டுள்ள மிரட்டல் வீடியோ ஒன்றில் அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையிலும், பிரிட்டனில் உள்ள பக்கிங்காம் அரண்மனையிலும், ஐ.எஸ்.ஐ.எஸ் கொடி பறக்கும் வரை எங்கள் போராட்டம் ஓயாது என்று மிரட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் தொழிலாளரின் போராட்டம் வெற்றி



கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலகத்திற்கு முன்பாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றத் தொழிலாளர் சங்கத்தினரின் அனுசரணையுடன நடைபெற்ற மேற்கொள்ளப்பட்ட கவன ஈர்ப்புப் போராட்டம் வெற்றியடைந்துள்ளது.

பணி நியமன வெற்றிடங்களை நிரப்பும் போது தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக தெரிவித்த தொழிலாளர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் இணைந்து மேற்கொண்ட இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் சுமார் 45 பேர் கலந்துகொண்டிருந்தனர்.

கடந்த 20ம் திகதி காலை 9 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இக்கவனயீர்ப்புப் போராட்டத்தை அடுத்து சுமார் 15 பேருக்கு ஆளுனரைச் சந்திக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

இவர்களின் கோரிக்கைகளைச் செவிமடுத்த ஆளுனர் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததை அடுத்து அன்றையதினம் 11.30 மணியளவில் இக்கவனயீர்ப்புப் போராட்டம் நிறைவிற்கு வந்தது.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச் சபையால் மேற்கொள்ளப்பட்ட பணி 13

# மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் தமிழ் 'மிஸ்ஸிங்'

### கி.மா உறுப்பினர் சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர் கடும் ஆட்சேபணை

72 வீதம் தமிழ்ப் பேசும் மக்களைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் சிங்கள மொழியில் மேற்கொள்ளப் படுகின்ற விடயம் கடந்த 20ம் திகதி திங்கட்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வெளிப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டோருக்கு வழங்கப்பட்ட கடந்த கூட்டறிக்கைப் பிரதி தனிச் சிங்கள மொழியில் இருந்தது. கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே.முகம்மது லாஹிர் இதனை ஆட்சேபித்தார். எங்களது தாய்மொழி தமிழ். எனவே எங்களுக்கு சிங்கள மொழியில் கூட்டறிக்கை வழங்குவது அரசியலமைப்பை மீறும் குற்றம் என்று தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரான பிரதியமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே, அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ரீ.ரீ.ஆர்.டி.சில்வா ஆகியோர் தமிழ் மொழியிலான மொழி பெயர்ப்பு 13

# கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!!

### மாகாண அமைச்சர்

### விசாரணையினை முறையாக முன்னெடுக்காததால் வினை

"பொது சுகாதார பரிசோதகர்களின் பணிபுறக்கணிப்பு போராட்டத்துக்கு காரணமான பொது சுகாதார பரிசோதகர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகள் இவருக்கு இலகுவான விசாரணைகளை செய்து உதவியளித்துள்ளனர்" என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.மன்சூர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பொதுசுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டு வரும் பணி புறக்கணிப்பு தொடர்பாக விளக்கம் அளிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே (21) அவர் இதனை தெரிவித்தார்.

எனினும் இச் செய்தி அச்சிடும் வரைக்கும் பொ.சு.பரிசோதகர்களின் போராட்டம் தொடர்கின்றது. தாம் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான காரணம் குறித்த அலுவலருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் தாபனக் கோவையின் பிரகாரம் முறையாக முன்னெடுக்கப்படாமையே என பெயர் குறிப்பிட விரும்பாத பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.

இப்போராட்டம் தொடர்பாக ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ள அமைச்சர் "மட்டக்களப்பு, காத்தான்குடி சுகாதர வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றிய பொது சுகாதார பரிசோதகர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இவர் கடந்த 5 வருடங்களில் அதிக இடங்களில் கடமையாற்றி வந்துள்ளார். திணைக்களம் இவருக்கு உதவி செய்யும் விதமாக விசாரணைகளை செய்து அருகில் உள்ள கல்முனை மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்துள்ளது. இது அவருக்கு வழங்கப்பட்டுள்ள 13

# 02ம் உலகப் போரில் விபத்தான கட்லினா விமானத்தின் பாகங்கள் மீட்பு




இரண்டாம் உலகப்போரின் போது இலங்கை கடலில் மூழ்கிய கட்டலினா எனப்படும் விமானமொன்றில் பாகங்களை கல்குடா கடற்கரையிலிருந்து சுமார் 10 கிலோமீற்றர் தொலைவான கடற் பரப்பிலிருந்து கண்டு பிடித்ததாக கடல்வள ஆய்வாளர் தர்சன ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டில், வசந்த என்ற மீனவரின் வலையில் சிக்கிய அலுமினியம் தகடொன்றை அடிப்படையாக வைத்து கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போதே இந்த விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று அவர் கூறினார்.

குறித்த விமானத்தின் என்ஜின்கள் இரண்டு, காற்றாடிகள் இரண்டு, சிறகுகள் மற்றும் அதனோடு இணைந்த பகுதிகள் என்பனவே இவ்வாறு மீட்கப்பட்டன. இவை, கடல் மட்டத்திலிருந்து 42 மீற்றர் ஆழத்திலிருந்து மீட்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 1943ஆம் ஆண்டு டிசெம்பர் 13

# கந்தளாய்க்குளம் சுற்றி வளைப்பு!!!



### விசேட அதிரடிப்படையினர் பணியில்

கந்தளாய்க் குளத்தின் பாதுகாப்புக் கருதி அக்குளத்தைச் சுற்றி பாதுகாப்பிற்காக விசேட அதிடிப்படையினர் பணிக்கமர்த்தப் பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

அண்மையில் குளத்தின் சில பகுதிகளில் நீர் வற்றியதை அடுத்து அப்படுக்கைகளில் மாணிக்கக்கற்க் கிடைப்பதாகப் பெருகிய வதந்தியை அடுத்துப் பலர் அப்படுக்கைகளைத் தோண்டி குழிகளை உருவாக்கியிருந்தனர். 13

அச்சு எந்திர மைண்டருக்கு
வேலைவாய்ப்புண்டு
தொடர்பு 0777555738

மலைமுரசு
MALAIMURASU
மலைமுரசு வாராந்தப் பத்திரிகை ஸ்ரீராம் பிரதர்ஸ் (தனி) நிறுவனத்தால் 159 A, கடல்முக வீதி, திருகோணமலையில் இருந்து 25.10.2014ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது

உங்கள் கையடக்கத் தொலைபேசியை மீள் நிரப்ப வேண்டுமா? செய்திகளை எமக்குச் சொல்லுங்கள் நாங்கள் மீள் நிரப்புகின்றோம் 0777 555 738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org